748

பைந்தமிழ்

தொகுதி 1 பகுதி 3

JL
031 m21, N23 PY
N23.1.3
144021.

14402
03
N23.13

# பைந்தமிழ்.

ஒரு மாதாந்தரத்தமிழ்ப்பத்திரிகை.

PINETAMIL

துந்துபி௵ பங்குனி௴

தொகுதி 1 | பகுதி 3

1923௵ மார்ச்௴

14 JUN 1923

---

பொருளடக்கம்.

பக்கம்.

1. கடவுள் வணக்கம் ... 89
2. பைந்தமிழ் வாழ்த்துப்பா . 90
3. ஓர் அன்பரின் கடிதம் ... 92
4. தமிழணங்கு தம்மக்களுக்கு அறிவுறுத்தல் ... 93
5. ஞானசாதனம் ... 95
6. அரசியின் அந்தரங்கம் ... 99
7. பாரதநாடு ... 104
8. வேதாந்த வசனம் ... 108
9. பிரகிருதி ஆராய்ச்சி விளக்கம் ... 111
10. வித்தையின் நிலைமை ... 115
11. ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர். 119
12. ஓடதம் ... 121
13. பஞ்சாங்கம் ... 127

கே. ஜகதீசன். பி. ஏ.
பத்திரிகாசிரியர்.

All rights Reserved.

## கவனியுங்கள்!

எந்நாளும் விலை அதிகரித்துக்கொண்டுவரும் அதி உயர்ந்த ஜர்மன் வைரங்கள், விந்தடிக் வைரங்கள் பச்சை, நீலம், முதலிய கற்கள் எவ்வித நகைகளுக்கும் உபயோகிக்கக்கூடியது? நாங்கள் விலை சரஸமாய்க் கொடுக்கிறோம். சொக்கத் தங்கத்தால் இழைக்கப்பட்ட மூக்குத்திகள் பேசரிகள், மோதிரங்கள், கடுக்கன்கள் கம்மல்கள், அட்டிகைகள், காப்புகள் முதலிய சகல நகைகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு வி கிறோம். ஒரு முறை பரீக்ஷியுங்கள். கேட்லாக்கு வேண் டியவர்களுக்கு அனுப்புவோம்.

ஜி. பி. ராமன் அண்டு கோ.

69, நாராயண முதலி தெருவு,

சென்னை.

**G. B. RAMAN & Co.,**

**69, Narayana Mudali Street,**

**MADRAS.**

14 JUN 1923 MADRAS

# பைந்தமிழ்ப் போஷகர்.



ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத ராஜா ராஜராஜேஸ்வர ஸேதுபதியாகிய முத்துராமலிங்க சேதுபதியவர்கள், ராமநாதபுரம் ராஜா.

---

(இவரது சரித்திரம் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்).

1 4 JUN 1923

கடவுள் துணை.

# "பைந்தமிழ்"

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு—திருக்குறள்.


| தொகுதி | துந்துபிஸ்ரீ பங்குனிமீ | பகுதி |
| --- | --- | --- |
| 1 | 1923ஸ்ரீ மார்ச்சுமீ | 3 |


## கடவுள் வணக்கம்.

### விநாயகர்.

"சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே."

### ஆறுமுக நாயனார்.

"ஆறுமணி மவுலியுங்கண் ணீராறுங் குழைகளீ ராறும் பால
மாறுநற் பவளவா யாறுமா றுவெழுத் தாறுமானோ
னாறுமிளிர் துண்டமுந்தோ ளீராறுங் கரங்களீ ராறுஞ்சோதி
யாறுவத னமுந்தொழுவோ ராறுத பிறவியினைப் பாறு வாரே.

---

1. அத்துவித வத்துவைச் சொற்பிரகா சத்தனியை
அருமறைகண் முரச றையவே
அறிவினுக் கறிவாகி யானந்த மயமான
ஆதியை யநாதி யேக
தத்துவ சொரூபத்தை மதசம்ம தம்பெறுச்
சாலம்ப ரகித மான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோம நிலையை

சித்தநிர்மலசகித நிஷ்பிரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்த மான
நிர்விகாரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராம யத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோம யத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலி செய்வாம்

---

2. சங்க ரன்சிவன் சதாசிவ னீசனீ சானன்
புங்க வன்றிரி புராந்தகன் புராதனன் புராணன்
கங்கை நாயகன் கறைமிடற் றிறைநுதற் கண்ண
னெங்க ளையக னிராமயன் சிராமலை யிறைவன்.

3. பூர ணன்பரன் பராபரன் வெள்ளியம் பொருப்பன்
கார ணன்மத னந்தகன் காலனைக் கடிந்தோன்
வார ணந்தனை யுரித்தவன் மறைப்பொருள் வகுத்தோ
னார ணன்றனக் கரியவன் சிராமலை நாதன்.

---

கடவுள் துணை.

# "பைந்தமி"ழின் வாழ்த்துப்பா.

## கும்மி.

"ஆதி விநாயகர் பாதத்தைப்போற்றி
அம்பிகை பாதமுந் தான் போற்றி
சோதி மதியணி யீசன் மலரடி
சிந்தித்துக் கும்மியைப் பாடலுற்றேன்." (1)

"சென்னைத் திருவல்லிக் கேணி யதனில்
சீர்பெற வந்ததைக் கேளுங் கடி
அன்னமே "பைந்தமி" ழென்றொரு சஞ்சிகை
ஆனந்த மாகவே வந்த தடி." (2)

"வந்து உதித்திட்ட பைந்தமி ழதற்கு
வாய்த்த அதிபனும் ஜெகதீசன்
தந்திடும் "நறமிழ்" வாசக மாகவே
தையலே போதிக்கும் புண்ய னடி." (3)



'தேடிப் பொருளை ஜீவிக்க யெண்ணமல்
தந்திட்டார் "சந்தாவை" தான் குறைத்து
நாடிப் பலர்கூடி வரைந்திடும் வியாசமோ
நூன்முறைச் சாரமாய்த் தோற்று மடி." (4)

"ஆதிகாலந்தனில் மேன்மை யடைந்திட்ட
ஆன்றோ ரொழுக்கமு நீதி களும்
மேதினியி லுற்ற ஆரிய மக்களின்
மாட்சியைக் காணலாம் கண் மணியே." (5)

"இன்னும் மனிதற்கு அறிவைப் புகட்டிட
எழில் பெறு "தமிழ்" மாமறைகள்
நன்னய மாகவே பைந்தமி ழதனில்
நாளு மருமை யாய்ப் பார்க்கலாமே." (6)

"பூலோகந்தனில் வந்துப் பிறந்திட்ட
பாரத மாதாவின் மக்க ளுக்கு
சாலோக சாயுஜ்ய மென்னும் பெரும்பதி
சார்ந்திடும் படிக்குச் செப்பு மடி." (7)

"தரும குணமுள்ளப் போஷகரும் ஸர்
(எம். ஸி. டி.) முத்தையா செட்டி யடி
அருமையா யுற்றதால் ஆண்டுகள் தோறும்
அவனியிற் றுலங்கச் செய்வா ரடி." (8)

"செப்புமிச் சஞ்சிகைக் கதிபனும் வள்ளல்
ஜெகதீசன் நீடூழி வாழ்க வென்போம்
ஒப்பி மனதுடன் சார்ந்திட்டப் போஷகர்
உறுதியாய்ப் பல்லாண்டு வாழ்க வென்போம்." (9)

"பைந்தமிழ" ங்கத்தில் வியாச மெழுதிடும்
புலவர்க ளென்னாளும் வாழ்க வென்போம்
சந்தா தாரேனையப் பற்றுள நேயர்கள்
சஞ்சலந்தவிர்த் தென்னாளும் வாழ்க." (10)

செப்பிய நாவலன் கோவிந்த சாமியும்
சீராக நீடூழி வாழ்க வென்பீர்
தப்பித மிருக்கினும் கற்றோர்ப் பொறுத்துமே
தரணியி லெந்தனை யாத ரிப்பீர்." (11)

ஓம் தத் ஸத்.

இங்ஙனம்,

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை,
தமிழ் நாவலன் & பப்ளிஷர் மங்கல்லூர்.

# ஓர் அன்பரின் கடிதம்.

போது நலமிக்கீர்!

நீவிர், அன்புகூர்ந்து நம்பார்வைக்கு விடுத்தப் "பைந்தமிழ்" குழவியைக்கண்டனம்; களிகொண்டனம். அச்செல்வி தன் பெயருக்கேற்ப, தன் அங்கமுழுதும் பைந்தமிழ்ச் சுவைநிறைந்த செவ்விய கட்டுரைகளை யணிந்து ஒளிவீசுகின்றனள். இத்தமிழ்க்குழவி, தோன்றிய முதல் மதியிலேயே அறிவை விளக்குமரிய வியாசங்களைச்சுமந்து, தன்னையன்புடன் அழைத்த அன்பர்களிடஞ்சென்று, அவர்கள் கரங்களில் தத்திவிளையாடி, அவர்களுடைய கண்களைத் தன்மேனியால் அதிசயிக்கச்செய்து, அவர்கள் மனதைக்கவர்ந்துபோய் இன்பக்கடலில் விட்டு, தான் சுமந்துவந்த அமிர்தமொழிகளையவர்கள் செவிகளில் கொட்டி இன்புறச்செய்துவிட்டாள். இப் "பைந்தமிழ்" மகவு முதல் மதியிலேயே இவ்வளவு வேலை நிகழ்த்துவதை நோக்குங்கால் இவளுடைய மதிமளர வளர, தன்னை விரும்பியவர்கட்கெல்லாம் வேண்டியபொருட்களைக் கொணர்ந்து தந்து தன் துணைவர்களை மகிழச் செய்வாளென்பது உறுதியாகிறதன்றோ! நமது இந்தியாவில் பல குழவிகள் தோன்றித் தோன்றிச் சின்னாட்கள், வளர்ந்து, பின்னர் இருந்த இடந்தெரியாமல் மறைந்துவிட்டிருக்கின்றனவன்றோ! அவைகளைப்போலவே தானே இதுவும் நிகழுமென்று எவரும் ஐயுறுதிருக்கக்கடவர்! ஏனெனில், நாம் இப் "பைந்தமிழ்"க்குழவி நம்மை வந்து கண்டபோதே இவள் இத்தன்மையள், என்றுணர்ந்துகொண்டோமன்றோ; இவள் பணத்தை விரும்பியவளல்ல; பொதுஜன சேவை செய்யவே தோன்றியிருக்கின்றாள்; இவளுக்கு பொதுஜன சேவைசெய்ய எஞ்ஞான்று பிரியம் ஏற்பட்டதோ அன்றைக்கே அவளுடைய அற்பாயுசு அழிந்துவிட்டது. "விளையும் பயிர் முளையிலே" யன்றோ! இப் "பைந்தமிழ்"ச்செல்வி எப்போதுந்தன் துணைவர்களுடைய சகாயத்தைக்கொண்டே வளர வேண்டியவளாக இருப்பதால் இம்மதலையைக் கண்ணுற்ற அன்பர்கள், இவளுக்குத்துணைவர்களாகி இவளை ஆதரித்து நமது நடுவண் இவள் நீடூழிகாலம் திருநடனம் புரிந்து நமக்கு இன்பமூட்டும் வண்ணம் செய்வார்களாக.

ஈசன் திருவருள் என்றும் ஓங்குக!!!



# தமிழணங்கு தம் மக்களுக்கு அறிவுறுத்தல்.

எல்லாம் வல்ல இறையனார் வாயில்
ஆரியமென்னும் அருஞ்சகோதரனுடன்
கூடப் பிறந்த குலக்கொடி யானே
சகத்தினில் வந்த அகத்திய முனிவரால்
வளர்க்க வளர்ந்த மங்கையும் யானே
வேங்கடங் குமரி வேலைசூ ழெல்லையில்
பாங்குடன் பயிலும் பாவையும் யானே
அகர இகர உகர மாகிய
மந்திர எழுத்தால் வாய்ந்ததும் யானே
வல்லின மெல்லின இடையினமாகிய
மூவகை மெய்பால் முளைந்ததும் யானே
தமிழெனு சொற்குச் சான்றோர் யாரும்
அமிழ்தினும் இனிதென அறைந்தனர் பொருளை
முதலிடை கடையெனும் மூன்று சங்கத்தும்
இயலிசை நாடகமெனும் முத்தமிழாய்ப்
பதினாயிரத்துத் தொண்ணூறாண்டு
நூற்றுத் தொண்ணூற் றெழுவர் பாண்டியரால்
எண்ணாயிரத் தறுநூறு பாவலரால்
வளர்க்கப்பெற்ற மடந்தையும் யானே
சீதையைத் தேடிச் சென்ற வானரர்க்கு
வழிமுழுதுணர்த்திய வானரத்தலைவன்
நான் செழுத்திருந்த நான் மாடக் கூடலைச்
சொற்றதாலென்றன் தொன்மையையறிக
திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும்
குன்றமெறிந்த குமாரதேவரும்
சங்கத்திருந்து தமிழாய்ந்தன ரெனில்
இங்கென் பெருமையை யியம்புவார் யாரே
தொண்டர் தோழனார் தூதுபோனதுவும்
கணி கண்ணற்காய்க் காஞ்சியை நீங்கி
மணிவணப் பெருமான்வழி நடை கொண்டதும்

என்பொருட்டென்பதை யினிதினுணர்க
ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியமாய்ச்
சிவபெருமானே திருவாய் மலர்ந்து
தம்பெயர் சாட்டிய தமிழிலக்கணமாய்ச்
சிந்தா மணி முதல் ஐந்து காவியமாய்ச்
உள்ள மினிக்கும் வள்ளுவர் நூலாய்
உம்பரும் வியக்குங் கம்பர் காவியமாய்
திருத்தேவாரமாய்த் திருவாய்மொழியாய்
அரிய புராணமாம் பெரிய புராணமாய்
மற்றுள நூலாய் வாய்ந்ததும் யானே
ஆரியம் செந்தமிழாறு மென்று
பரசிவன் உருவமாய்ப் பகரவும் பெற்றேன்
திருமாலுருவெனச் செப்பவும் பெற்றேன்
சபதங் கூறுவோர் தமிழ்மேலாணை
கூறவும் பெற்றகுலக் கொடியானே
இன்னும் என்பெருமை யியம்பவும் போமோ
பெருநில வேந்தரும் குறுநில மன்னரும்
சைவ வைணவ சமய குரவரும்
புத்தரும் சமணரும் போற்றப் பெற்றயான்
ஆங்கில பாஷை யணுகிய பின்னர்ப்
பெற்ற தாயைப் பேணார் போல
உற்று நோக்குவா ரொருவரு மின்றித்
தளர்வுறுகின்ற என் தளர்வை நீக்குமின்
கம்பொன்பா கலந்த தென்றாற் போல்
என்மொழி கலந்தே யியம்புவ தோர்மின்
ஐரோப்பாவில் ஆர்ந்த பசுவும்
அம்மாவென்றே யறைவதை யறிமின்
பாஷாபிமானம் பாரிவின் றெனில்
தேசாபிமானம் சிறிது மின்றாம்
ஆகையா லென்னை ஓகையாத் தழுவி
முன்போலென்னை முதிர் வுறச் செய்து
வாழுமின் வாழுமின் வாழுமின்னீரே.

ஜி. சதாசிவம் பிள்ளை,
"நீலலோசனி" நாகை.



# ஞான சாதனம்.

சகல ஜீவன்களும் இன்பத்தையே இச்சிக்கின்றன; துன்பத்தை விரும்புவதில்லை. துக்கநிவர்த்திக்கும் இன்பநுகர்ச்சிக்குமே பலமுயற்சிகளும் இயற்றப்படுகின்றன. அவ்வாறே எய்தவும் பெறுகின்றன. ஆயினும் அவ்வின்பம் அற்பமானது; அழிவுள்ளது; துன்பக்கலப்புள்ளது. கடல்போல் அளவிடமுடியாததும், அழிவற்றதும், இலவலேசமும் துக்கக்கலப்பற்றதுமாகிய பேரின்பம் ஒன்றுண்டு. அங்ஙனமாயின் அஃது மோக்ஷசுகமாகவன்றோ விருத்தல்வேண்டும்? எனின்; ஆம்: ஆயின், அது மறுமையினன்றோ எய்தப்பெறும் என மயங்கற்க. அற்றன்று. இம்மையின்கண்ணும் அத்தகைய முத்தியின்பத்தை யடைதலாம். அப்பேரின்பத்தை யடைந்தபெரியோர் நம்நாட்டில் எண்ணிறந்தோர் இருந்தனர். இருக்கின்றனர். ஆதலின் நாமும் அதனையே அடைய முயலல்வேண்டும். அதுவே பிறவிப்பயனென்க.

மோக்ஷமாவது சர்வதுக்கநிவர்த்தி பரமாநந்தப் பிராப்தியேயாம். சர்வதுக்கநிவர்த்தி பரமானந்தப் ப்ராப்திவடிவமாகிய முத்தியைப்பெற வேதத்தில் கர்மம், உபாசனை (பக்தி), ஞானம் என மூன்று மார்க்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பக்குவிகளுக்கேற்பப்பகுக்கப்பட்டுள்ள இம்மூன்றனுள் ஞானமே நேர் சாதனமாகும். ஞானமின்றி முத்திசித்திக்காது. இதனை நந்தாயுமான சுவாமிகள் "பத்திநெறிநிலைநின்றும்" எனத்தொடங்கும் "சின்மயானந்தகுரு 3ம்" பாசுரத்தால் பூப்பிரதக்ஷிணஞ்செய்து புண்ணியக்ஷேத்திரங்களைத்தரிசித்தாலும், கங்கை யமுனை யாதிய தீர்த்தங்களில் நீராடினும், பஞ்சாக்கினி மத்தியில்நின்று கடுந்தவம்புரிந்தாலும், அஷ்டாங்க யோகங்களைப் பயின்றாலும், அஷ்டமாசித்திகளைப்பெற்றாலும் "ஞானமலதுகதி கூடுமோ" எனக்கூறிய வமுதமொழியாலுமறிதலாம். இதனால் முத்திக்கு ஞானமே யின்றியமையாச்சாதனமென்பது பெற்றாம் இனி,

ஞானமாவது என்ன? என்பதைப்பற்றிச்சிறிது ஆராய்வாம். ஞானம் சாமானியஞானம் விசேஷ ஞானம் என இருவகைத்து.

சாமானியஞானமாவது, மெய் வாய் கண் மூக்கு செவிகளாகிற பஞ்சேந்திரியங்களாலறியப்படும் ஞானம். இதை லௌகீகஞானம் என்றும் கூறலாம். இதை நீக்கிமற்றையதாகிய விசேஷ ஞானமே ஈண்டுக்கொள்ளத்தக்கது. இது வைதீகஞானமென்றும் சொல்லப்படும். இஃதும் பரோக்ஷஞானம் அபரோக்ஷஞானம் என இருவகைப்படும் சுருதி குரு வாக்கியங்களால் ஒன்றைத்தெரிந்து தானும் அஃதுண்டென்று யுக்தி பூர்வகமாக் தெளிதல் பரோக்ஷம். தானே அதனை நேரில் அனுபவபூர்வகமாயறிதல் அபரோக்ஷம்.

ஞானம் எனினும் அறிவெனினும் பொருந்தும். அது "தன்னை யறிவதே அறிவாம்; அஃதன்றிப் பின்னையறிவது பேயறிவாமே" என்றபடி நான் யார்? கடவுளின் சொரூபம் யாது? இப்பிரபஞ்சம் எத்தன்மைத்து? எனவாராய்ந்து நான் தூல சூக்கும காரணங்களென்றும் மூவகைச் சரீரங்களினும் வேறாயுள்ளவன். அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐவகைக்கோசங்களுக்கும் விலக்ஷணனாயிருப்பவன்; அதாவது இவைகளெல்லாம் நானல்ல நான் இவற்றிற்கெல்லாம் சாக்ஷிமாத்திரமாயிருப்பவன். நாசமற்றவன். சச்சிதாநந்த சொரூபமுடையவன். பரப்பிரமத்திற்கபின்னமாயுள்ளவன். அதாவது யானாகிய ஆத்மா பரப்பிர்மத்திற்கு வேறன்று. ஆத்மாவாகிய எனக்கு வேறாகக் காணப்படும் காரண காரிய வடிவமான இப்பிரபஞ்சம் சொப்பன வுலகைப்போலமித்தையாகும் என்று சந்தேக விபரீதமற அபரோக்ஷமாயறிதலே ஈண்டு ஞானமெனப்படுவதெனவறிக. இதுவே வீடு பேற்றிற்கு நேர் சாதனமாகும்.

பாராதி பூதநீ யல்லை—உன்னிப்
பாரிந்தி ரியங் கரணம் நீயல்லை
யாராயுணர்வுநீ யென்றான்—ஐயன்
அன்பாயுரைத்தசொல் ஆனந்தம் தோழி. (தாயுமானர்)

என்றபடி, தத்துவ ஆராய்ச்சியின் மூலமாகத்தான் யார் என்றறியவேண்டும். (பிறகு தான் அதுவே ஞானம்) அதன் மூலமாகத்தனக்காதாரத் தலைவனை யறியலாம்; அவனால் வீடுகூடும்.



தன்னையும் தனக்காதாரத்தலைவனையும் கண்டானேல்
பின்னையத்தலைவன் தானாய்ப் பிர்மமாய்ப் பிறப்புத்தீர்வன்
உன்னைநீ யறிந்தாயாகில் உனக்கொரு கேடுமில்லை
(கைவல்யம்)

* * * *

இத்தகைய ஞானம் முத்திக்கேதுவாயிருத்தல்போல ஞானங்கூடுதற்குச் சாதனமாயுள்ளவை யெவை? என்பதே ஈண்டு நாம் ஆராயத்தொடங்கிய விஷயம். யாதாமொரு பொருளையடைய விரும்புமொருவன் அப்பொருளை யடைதற்கேற்ற சாதனங்களைக் கண்ணுங்கருத்தாகச் செவ்வனே செய்து முடித்தாலன்றி, அப்பொருளை யடைதல் கூடாமை போல, ஞானவாயிலாக வீட்டைப் பெற விழைவோரும் அதன் சாதனங்களைச் சாதித்தல் அத்யாவசியமாம். சாதனம்- கருவி- பயிற்சி என்பன ஒரே பொருளைக் குறிக்கும் சொற்கள்.

இச்சாதனம் நான்கு வகைப்படும், அவையாவன :—(1) நித்தியா நித்தியவஸ்து விவேகம் (2) இகமுத்திரார்த்தப் பலபோகவிராகம் (3) சமாதி சட்க சம்பத்தி (4) முமுக்ஷுத்வம். இவற்றைச் சாதன சதுஷ்டயமெனக் கூறுவர். இனி இவற்றின் பொருளைத் தனித்தனி ஆராய்வாம்.

(1) நித்திய அநித்தியவஸ்து விவேகம் :—வஸ்துக்களின் நித்தியத் தன்மை அநித்தியத்தன்மைகளை ஆராய்ந்து நிச்சயிக்கும் அறிவு. நித்தியவஸ்துவாவது என்றும் அழியாப்பொருள். அநித்தியவஸ்துவாவது அழியுந்தன்மையது. (நித்தியம்=அழியாமை. இதன் எதிர் மறை அநித்தியம்.)

அழியாப்பொருள் எது? அழியும்பொருள் எது? என்று ஆராயுமிடத்து, சச்சிதானந்த சொரூபமாகிய ஆத்மாவே நாசரகிதமானது (அழியாதது) என்றும், நாமரூபங்களாகக்காணப்படும் மற்றெல்லா வஸ்துக்களும் அழிந்து போகக்கூடியவைகளே யென்றும் புலனாமென்க. இவ்வாறு நித்திய அநித்தியவஸ்துக்களின் தன்மையை யறியாது பொய்யை மெய்யெனக்கருதி யிருத்தலே எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாகும். இதனைப் "பொருளல்லவற்றைப்

பொருளென்றுணரும், மருளானா மாணாப்பிறப்பு." என்ற வள்ளுவர் வாக்கானு முணர்க. மெய்யுணர்வின் லக்ஷணத்தை ஆசிரியர் பரிமேலழகர் "சராசரமாகிய பொருள்களிலெல்லாம், உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்ற உண்மையைக் காண்பதே மெய்யுணர்வு என்பதாம், அதாவது அரசன் சேரமான் என்றவிடத்தே அரசனென்பதோர் சாதியும், சேரமானென்பதோர் குடியும் ஒருவனிடத்தே கற்பனையாதலால் அக்கற்பனையை விட்டு அவனைப்பிருதிவி முதல் உயிரீறாகிய தத்துவங்களின் கூட்டமென்றறிந்து, அத்தத்துவங்களைப்பிருதிவி முதலாகிய அதனதன் காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டுபோய் முடிவில் காரணகாரியமிரண்டுமில்லாமல் நிற்பதனை யறிதலாம், எனக்கூறியாங்கு பொய்யைப் பொய்யாகவும் மெய்யை மெய்யாகவும் உள்ளவாறு உணரவேண்டும் என்றனர். நாமரூபமுடையப் பொருள்களெல்லாம் அழிவுள்ளவைகளே. ஆகையால் பலமரங்களின் கூட்டமே தோப்பு என்னப்படுவதன்றி, தோப்பிற்கு வேறு வடிவமில்லாததுபோல, தனக்கெனவோர் வடிவமின்றிப்பலவின் கூட்ட சமஷ்டிவடிவப் பிரபஞ்சப்பொருள்கள் அநித்தியமே.

தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்ய பங்கயத்தின் மேவ
நான்முகத் தேவ நின்னா னாட்டிய வகிலமாயை
கான்முயற் கொம்பே யென்கோ கானலம் புனலே யென்கோ
வான்முக முளரியென்கோ மற்றென்கோ விளம்பல்வேண்டும்
(தாயுமானவர்)

என்ற அநுபவமொழியின்படி, கற்பிதத்தோற்றமாகி ஆராய்ச்சியின்கண் இன்மையாய்க்கழியும், நாமரூப தோற்றமுடைய அகிலம் அநித்திய வஸ்துவென்றும், ஆன்மாவொன்றுமே நித்தியவஸ்துவென்றும், அறிதற்பாலதாம். இஃதே நித்தியாநித்திய வஸ்து விவேகம் என்னும் முதல் சாதனமாம்.

(இன்னும் வரும்)

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப்பண்டிதர், ராணிப்பேட்டை.



# அரசியின் அந்தரங்கம்
அல்லது
# மர்மக்கள்ளர்கள்.

(75ம்-பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக:—ஐயா! நாம் இந்த மாதிரியான பாதாளங்களில் இதுவரையிற் சென்றதில்லையாதலால் தங்களில் யாராவது முன் செல்லுங்கள்............" என்று அதிகாரமாகக் கூறினான்.

தீனதயாளு:—(கங்காசிங்கிற்கு கண்ணைக்காட்டி) "ஐயா! நானும் உன்கூட வருகிறேன். தாராளமாக தாங்கள் செல்லலாம்" என்று தன் கையிலுள்ள விளக்கைக்காட்டி அந்த கதவின் வழியாகச் செல்லும் படிக்கட்டுகளை நோக்கினான். அப்பொழுது அவன் கண்ணிற்கு யாரோ எட்டிப்பார்த்தாற்போலிருந்தது. அப்பொழுது லெப்டினெண்ட் சிறையாளியை நோக்கி "வர்த்தகருந் தாங்களும் இராணிக்கு ஏதேனும் தெரிவிக்கவேண்டுமானால், அதைக் கூறினால் தெரிவிக்கிறேன். அப்படி ஏதேனும்..........." என்றதே, வர்த்தகசிங், அந்த கதவின் நிலைபண்டை நின்றுகொண்டு, "கங்காசிங், தாங்கள் என்பேரிலுள்ள அபிமானத்தாற் பணிவாகக்கேட்கிறீர். அதற்காக நான் எனது வந்தனத்தைச் செலுத்துகின்றேன். இராணியிடம், நான் பிழைத்தால் ரகசியம் வெளியாய்விடும் எனச் சொல்லுங்கள்..........சரி, தாங்களும் வாருங்களேன், தங்களிடம் சில சமாசாரம் சொல்லவேண்டும்........" என்கவே.

கங்காசிங்:—"ஆ! முன்னால் செல்லுங்கள்............போய்ப் பேசலாம்" என்றான்.

வர்த்தகசிங்கம் பிரபு (அவரது சரித்திரம் பின்னால் நமக்கு விளங்கும்.) "சரி" என படிக்கட்டிற் புகுந்ததும், பின்னால் படீரென கதவு சாற்றப்பட்டது. உடனே அவர் கதவைப் பிடித்தார். ஆனால் அவர்கைக்கு கங்காசிங்கின் கத்திமுனை அகப்பட்டது. அவர் அதைப்பிடித்து இழுத்தார். அதுவும் அவருக்கிணங்குவதுபோற் கைக்குக்கிட்டியது; கதவு சாற்றப்பட்டது. இவர் படிக்கட்டிலேயே நின்றார். எங்கும் காரிருள் சூழ்ந்துகொண்டது.

பிரபுவிற்கு இவர்கள் வஞ்சகத்தை எண்ணினதே மனம் திடுக்கிட்டது. அவர் அப்படியே மயங்கி நின்றார். சற்றுநேரம் ஏதோ சிந்தித்தார். இந்தக் காரிருளில் எத்தனைகாலம் பட்டினி கிடந்து சாகவேண்டுமோ என கருதினார். இராணியின் வஞ்சகச்செயலையும் மூர்க்கத்தனத்தையும் எண்ணி கோபங்கொண்டார்.

திடீரென பிரபுவிற்கு ஒரு யோசனை வந்தது. அவர் கதவண்டை அணுகினார். அது நல்ல கெட்டியான இருப்புக்கதவாக இருந்தது. அதைத்திறக்க முயன்றார். ஆனால் முடியவில்லை. கோபம் தலை கொண்டது. தனது வலதுகாலால் தன் பலங்கொண்டமட்டும் ஓங்கி உதைத்தார். அப்பொழுது அவர் செவிகளுக்கு யாரோ கொல்லெனச் சிரிப்பது நன்றாகக்கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினார். தனக்குப்பின்னால் ஒரு திடமான மனிதன் கையில் ஒரு மெழுக்குவத்தி விளக்கை பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருப்பதை பார்த்தார். பிரபு முதலில் திடுக்கிட்டாலும், பிறகு தைரியத்துடன் தான் கங்காசிங்கிடம் அபகரித்த வாளை உருவிக்கொண்டே "யார் நீ?" என்று கேட்டார்.

அம்மனிதன் :—"என்ன, வர்த்தகசிங்கரே...............இன்றுமா ... ........ ..." என்றதே.

பிரபு :—"என்ன இன்றுமா.........டேய், யார் நீ?" என்று கோபத்துடன் கேட்டார். அம்மனிதன் சட்டென்று விளக்கை ஒரு நிமிடம் மறைத்துப் பிறகு தன்கையைப் பிரபுவினிடம் காட்டினான், பிரபு அதைக்கண்டதே திடுக்கிட்டார். பிறகு, "ஆ! நீயாரப்பா?" என சாந்தமாகக் கூறினார், அம்மனிதன் பிரபுவின் காதில் ஏதோ சிலது கூறினான். அதைக்கேட்டது தான்; பிரபுவிற்குச் சொல்லொணா ஆச்சரியமும் வியப்பும் உண்டாகி, அவர், "ஜெகஜாலன்" என வாய்விட்டுக்கூறினார்.

உடனே அம்மனிதன், "பிரபுவே, கூவவேண்டாம். என்னுடன் வாருங்கள். தப்புவிக்க வழியிருக்கிறது" என்று சொல்லி அந்த இருண்ட நிலவறைப்படிகளிற் சென்றான். ஒரு சிறிய கதவை அடைந்ததும் பிரபுவை நோக்கி, "பிரபுவே, நாம்போகிற இடங்களுக்குப் பெயர் அறிவீரோ" என்றான்.



பிரபு :—"என்ன, புதிய பெயரா?" என்று அதிசயத்துடன் கேட்டார்.

அம்மனிதன் :—"ஆ! தாங்களறியமாட்டீர்களென நானறிவேன். பிரபுவே, இந்த விடங்களுக்கு பாதாளக் கிடங்குகள் என்று பெயர்." என்றான்.

பிரபு:—"இந்த விடங்கள் என்றீரே, இன்னும் எந்தவிடங்கள்?" என்றார்.

அம்ம :—"பிரபு, தங்களுக்கு இந்தக் 'கிடங்கின்' ரகசியங்கள் தெரிய விருப்பந்தானோ" என்று கேட்டான்.

பிரபு :—"ஆஹா? தடையின்றி பார்க்கவும் இஷ்டந்தான்" என்றார்.

அம்ம :—"அந்த விடங்கள்தான் நாம் போகப்போகிறது. சப்தம் செய்யாது என்னுடன் வாருங்கள்"என்று கதவைத்திறந்துகொண்டு உட்சென்றான்.

இவர்கள் சென்றது ஒரு சிறிய அறை; அது நல்ல கெட்டியான கருங்கற் சுவரால் கட்டப்பட்டிருந்தது. அந்த அறையிற் காற்றோட்டமே கிடையாது; ஆனால் சுவற்றில் ஒருபக்கத்தில் சிறிய துவாரமொன்றிருந்தது. பிரபுவிற்கு, அதைக்கண்டதே பயங்காம் உண்டாயிற்று. அவர், "இதில் சிறைபட்ட மனிதர்கள் எப்படித்தான் ஜீவித்திருப்பார்களோ!" என்று எண்ணினார். அந்த அறையை அடைந்ததும் ஜெகஜாலன் தன்கையிலுள்ள விளக்கை பிரபுவினிடம் கொடுத்துவிட்டு அங்கு ஒரு இருண்ட மூலையிற் காணப்பட்ட ஒரு இருப்புக்கதவைத் திறந்தான். அந்தக்கதவு பூட்டப்படாமல் சாதாரணமாகவே சாற்றப்பட்டிருந்தது. கதவைத் திறந்தபிறகு பிரபு ஜெகஜாலன் கூடசென்றார். கதவினருகில் வந்ததே பிரபு விளக்கை ஜெகஜாலன் கையிற்கொடுத்தார். முன்னால் ஜெகஜாலன் உள்ளே சென்றான். உள்ளேபோனதும், அவன் விளக்கை உயரத்தூக்கி[illegible] பிரபுவும் உள்ளே சென்றார். உள்ளே சென்றதும் பிர[illegible] தலையை [illegible]து நோக்கினார். நோக்கினதுதான். பிர[illegible]"[illegible]" வென்றலறின[illegible]

124 021.

தள்ளாடி விழப்போன அவரை ஜெகஜாலன் பிடித்துக்கொண்டான். பிரபு, பிரமை நீங்கியபின் நடுக்கத்துடன் ஜெகஜாலன் கரங்களைப் பிடித்துக்கொண்டு, "ஆ! இவர்கள்யார்? இவர்கள்யார்" என்று நடுக்கத்துடன் கேட்டார்.

ஜெக:—"பிரபுவே, அருகில் செல்லுங்கள்" என்றான்.

ஏனெனில் அங்கு கதவிலிருந்து வரிசையாக பல உருவங்கள் உருவியகத்தியுடன் நின்றுகொண்டிருந்தன. கதவுதிறக்கப்பட்டேயிருந்தது. ஜெகஜாலன் கதவை மெதுவாகச் சாற்றியதே, அந்த உருவங்கள் ஓங்கியபடியிருந்தகரங்களை மெதுவாக கீழே போட்டன. பிரபுவிற்கு அப்பொழுதுதான் அவைகள் வெறும் சிலைகளென்றும் நிஜஸ்வரூபங்களல்லவென்றும் தெரியும். அவர் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டார். ஜெகஜாலன் அவரை கூச்சப்படாதிருக்கும்படிக்கும் சொல்லி அவ்வறையிற் காணப்பட்ட ஒரு சாதாரண பாதாளத்தைக்காட்டினான். பிரபுவிற்கு அதைநோக்கியதே மிகவும் பயங்கரமுண்டாயிற்று. அங்கு பல எந்திரங்கள் காணப்பட்டன. அவைகள் பற்பல விதமான கொலையந்திரங்கள் என அதைப்பார்த்தவுடனே நன்றாகப்புலப்பட்டது, அதன் பிறகு பிரபு ஜெகஜாலனுடன் அவ்வறையை ஒரு கதவின் மூலமாகக் கடந்து வேறொரு குறுகிய மாச்சந்திற்புகுந்தார். அவர்கள் சென்றுகொண்டேயிருக்கையில் சட்டென்று விளக்கு நின்று விட்டது. அப்பொழுது யாரோ நடந்துவருவது போற்றோன்றிற்று. இவர்கள் சுவரோரமாக நின்றார்கள். ஜெகஜாலன் வருகிறவன் தன்னண்டை வந்தவுடன் குறுக்கே காலைக்கொடுத்தான். வந்தவன் தடுக்கப்பட்டு திடீரென கர்ணம் போட்டுக்கொண்டே அப்பால் விழுந்தான். பிரபு அவனைத் தூக்கச்செல்ல நினைத்து போகமுயன்றார். ஆனால் ஜெகஜாலன் அவரைமறுத்து தன்னுடன் அழைத்துச் சென்றான். பிரபுவிற்கு இவைகளெல்லாம் கனவுபோன்றிருந்தன. அவர் பேசாது அவன் பின்னாலேயே சென்றார். பிரபுவிற்கு இவன் துரோகம் செய்கிறானோ என்று எண்ணினார், பாதி தூரம் சென்றதும் ஜெகஜாலன் அங்கேயே நின்று, "பிரபுவே நாம் வெளியிற் சென்று விடுவோமா?" என்று கேட்டான்.



பிரபு:—"வெளியிலென்றால் எங்கு?" என்று வினவ.

அவன்:—"சிறையை விட்டு நீங்கி விடுவது. ஹோட்டலை விட்டு வெளித்தாண்டிவிடுவது," என்றான்.

பிரபு:—(ஆச்சரியத்துடன்) "அது எப்படி முடியும்?"

ஜெக:—"இதோ, பாருங்கள்" என்று தனது சட்டைப்பையிலிருந்த ஒரு நெருப்புப் பெட்டியிலிருந்து ஒரு குச்சியெடுத்துக் கிழித்து தன் கையிலுள்ள விளக்கை ஏற்றினான். உடனே அவன் விளக்கை உயரப்பிடித்து, தடுக்கப்பட்டு, மனிதன் விழுந்த இடத்தைப் பிரபுவிற்குக் காட்டி அங்கு பார்க்கச் சொல்ல, அங்கு ஒரே பாதாளமாக பிரபு இருக்கக்கண்டார். வர்த்தசிங்கருக்கு ஆச்சரியமும், பயமும் ஒரே சமயத்தில் உண்டாயிற்று. அவர், "ஆ! கொடுமை" என்றார். பிரபுவிற்கு அப்பொழுதுதான், தன்னை அங்கு போகவிடாது ஜெகஜாலன் மறுத்ததின் காரணம் புலப்பட்டது. அதன் பிறகு ஜெகஜாலன் பிரபுவை அந்த சிறிய சந்தின் வழியே கொஞ்சதூரம் அழைத்துச் சென்றதும், அங்கு காணப்பட்ட ஒரு சிறிய சாளரத்தை உற்று நோக்கினான். அதன் வழியாக பிரபுவும் நோக்கியபொழுது, தோட்ட வாயில் தென்பட்டது. நிலவு நன்றாக ப்ரகாசித்துக்கொண்டிருந்தது. ஜெகஜாலன் அங்கிருந்த வில்லாணியை அழுத்தினான். உடனே சாளரம் மூன்றடி சதுரத்திற்கு விலகி ஒரு வழியை உண்டுபண்ணிற்று. அதன் வழியாக அவர்கள் தோட்டவாயிலை அடைந்தார்கள். வாயில் பூட்டப்பட்டிருந்ததால், பிரபுவும் ஜெகஜாலனும், தோட்டத்திலுள்ள மரங்களினிடையே பதுங்கிக்கொண்டே மேல்பக்கமாகச் சென்றார்கள். ஜெகஜாலன் முகத்தில் ஒரு மூடியணிந்து கொண்டிருந்தான். இவர்கள் மேல் பக்கத்தை யடைந்ததும், அங்கு முன்னமே தயாராகத் திறந்து வைக்கப்பட்டிருந்த கதவின் வழியாக வெளித்தாண்டிவிட்டார்கள். இவர்கள் இருவரும் சப்தஞ்செய்யாது சாலையின் மரங்களின் வழியேசென்றார்கள். இவர்களுக்கு முன் வெகுதூரத்தில் பல குதிரைவீரர்கள் செல்வது நன்றாக கண்களுக்கு தென்பட்டது.

குதிரைவீரர்கள் கண்களுக்கு மறைந்ததும் ஜெகஜாலன் தான் முகத்திலணிந்து கொண்டிருந்த மூடியை எடுத்தான். அப்பொழுது

பிரபு அந்த ஜெகஜாலன் முகத்தை ஒருமுறை கண்டார். திடீரென அவர் "சுந்தரம்!" எனக்கூவினார். மறுநிமிஷம் இருவரும் ஆலிங்கனம் செய்துகொண்டார்கள். உடனே பிரபு கூறிய சுந்தரசிங்கம் பிரபு "வர்த்தகசிங்கரே சகலமுமறிந்தீரோ?" என்று கேட்டார்.

வர்த்தக:—"பிரபுவே, எல்லாமறிந்தேன். ஆயின் சிலசந்தேகங்கள் உள்ளூர இருக்கின்றன." என்றார்.

சந்:—"ஆனால். அருகிலுள்ள ஹோட்டலுக்குச்செல்வோம். வாரும்" என்றார்.

இருவரும் உடனே துரிதமாக நடந்தார்கள். சந்திரனும் கொஞ்சங்கொஞ்சமாக மறைய ஆரம்பித்தான்.

(தொடரும்).

ச. பஞ்சாபகேச அய்யர்.

## பாரத நாடு.

முத்திசை கடலும் வடதிசை உலகத்திலுயர்ந்த மலையரசாம் ஹிமாசலத்தாலும் சூழ்ந்த நம்நாடு பொன்னாடு என்றும் ஞான பூமி என்றும் எம்மதத்தையும் சம்மதமாகருதி அவனருளால் அவன்றாள் வணங்கும் சத்துவகுணசீலர் மலிந்த தேசம் என்றும், இதர நாட்டாரைப்போல் சிற்றின்பத்தையும் உலகபோகத்தையுமே பாராட்டி கண்டதே காட்சியாய் இராது அரிதான நரஜன்மம் அடைந்ததின் பயன் பேரின்ப வீடு பெறுவதே என்ற உத்தமர் உறையும் தேசம் என்றும், மூர்த்தி தலம் தீர்த்தங்கள் நிறைந்து அறத்திற்கு புகலிடமான நம் தாய் நாடாகிய இந்து தேசத்தை புகழாத பிறநாட்டாரில்லை. பிராசீன இந்தியாவையும் நவீன இந்தியாவையும் நோக்கும் ஒவ்வொரு இந்தியன் மனமும் கசியாதிராது. நடுக்கும் குளிரும் கொல்லும் வெயிலுமில்லாத நன் நாடு. இது பரத சக்ரவர்த்தியின் கீழ் ஆளப்பட்டதுபற்றி பரதக் கண்டம் என்ற நாமமும் பாரதயுத்தம் நடந்து பாரத வீரர்களின் வீர்யத்தை விளக்கியது பற்றியும் பாரத நாடு என்றனர் போலும் பூர்வீகர்களுடைய அருமை பெருமைகளைக் கொண்டு நம்மவர்



பெ[illegible]ாயம் கட்டிய துணிபோல் விளங்குகிறார்களே யன்றி தற்காலத்திய நிலையில் உண்மையில் பிறநாடுகளிடையே அடிமை நாடாய் [illegible] மேகத்தால் மறைக்கப்பட்ட சந்திரனைப்போல், பதிந்து கிடக்கிறது நம்தாய் என்பதை மறுப்பவருமுண்டோ? பண்டை புரவலர்களின் புகழ் நீண்ட தர்ம ஆட்சியையும்; அந்நாள் நாகரீக, வர்த்தக கைத்தொழில் மாட்சிமைகளை, நம்புராண இதி ஹாசங்களும் ஸ்ரீமத்சேது பரியந்தமுள்ள ஆலயாதி நிர்மாணங்களால் காண்கின்றோமே யன்றி தற்கால் பாடசாலை இந்திய சரிதங்களால் உண்மைகளும், நம்மவர் பூர்வீக பெருமை வீரங்களும் நன்கு புலப்படுவது குறைவே யாகும்.

உலகத்தின் பலவித சமயங்களில் சிறந்தது இந்து மதமே என்பதை அமெரிக்காவில் சிகாகோ நகரின்கண் கூடிய சர்வ மத மகாசங்கத்தில் பல்லாயிரக்கணக்கான மத ஆராய்ச்சி நிபுணர்களும் கிருஸ்துவ, மகம்மதிய, ஜைன, புத்த, பார்ஸி முதலான சமயப் பற்றுள்ள தீவிரமதாபிமானிகளுக் கிடையில் நிகழ்ந்ததோர் பெரிய வாதத்தில் வென்று "இந்து மதமே உத்கிருஷ்டமானது அதிலுள்ளவாறு கடவுள் அடியை அடையும் ஆழ்ந்த அஸ்திவார மார்க்கங்கள் வேறு மதங்களில் சுலபத்திலில்லை" என்ற ஜெய முரசை பிரசித்தப்படுத்தியவர் பகவான் ஸ்ரீ பரம ஹம்ஸ ராம கிருஷ்ணதேவரின் சீடராகிய மஹான் விவேகாநந்தர் என்கிற ஒரே இந்திய சன்யாசியின் அபார செய்கையே விளக்குகின்றது. அந்தோ! பலர் பிறமதம் புகுவதேன்? நமது நாடு கற்பரசிகள் மலிந்த நாடு. பக்தர்கள் விரவிய விசால நாடு. மேல் நாடுகளைப்போல் ஒருவர்க்கொருவர் பிறர் மனைவிகளைப்பற்றி களியாட்டம் ஆடும் அவலக் கொள்கையே மேலென மதித்து பிரியப்படும் நாகரீகர்காள்! ஸ்திரீகளுக்கும்புருஷனைப்போல் வெளியில் வேலைசெய்ய உத்தியோகம் புரிய வாக்குரிமை அளிக்கவேண்டும் என்று வாதாடும் பிரமுகர்களின் மனோ பாவம் விசனிக்கத்தக்கது. கடவுளேகாக்க! "தெய்வம் தொழாள் கொழுநற் றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்ற கற்புக்கரசிகளாம் சாவித்திரி, நளாயினி, சீதா, தமயந்தி, அனுசூயை முதலிய மாதர்களையும் திருவள்ளுவரின் பத்தினியாரும் மாதாகஸ்தூரிபாய்போன்ற பதிபக்திவாய்ந்த

செல்விகளை நோக்கலாகாதா? அத்தகைய இந்திய மாதரை மேல் நாட்டாரைப் போலாக்க முயல்வது இந்திய தர்மத்திற்கழகா? புருஷன் உழைத்து. உணவு கொண்டுவர ஸ்திரீ "பெண்டிற்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்றவாறு அடங்கி அடிசில் ஆக்கி வைத்து வீட்டையும் குழந்தைகளையும் கவனிப்பது முறை. புருஷனிருக்க ஸ்திரீ வெளிச் சென்று உத்யோகாதிகள் செய்வது இந்து சாஸ்திர அசம்மதமும் புருஷனுக்கு லக்ஷணக்குறைவுமாகும். "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இல்வாழ்வோன் துணை" என்பது குறளாசிரியர் வாக்கு. சில தமோகுண பேதைமாந்தர்கள் தங்கள் மனைவிகளை "அர்தாங்கி" என்று அன்பு பாராட்டி வாராது எதிர்மாறாய் தாசிலோலராய், தன் அன்பிற்கிருப்பிடமும் குல விளக்காயுமுள்ள வாழ்க்கைத்துணைவியை அடிமையாகமதித்து அடித்து வருத்துவது கடவுளுக்கு விரோதம், அவர்கள் செய்கையை உலகமே மறுக்காதிராது. ராஜபக்தியில் சிறந்த நாடு. அரசன் கடவுளின் ரூபம் "நாவிஷ்ணுஃ பிரதிவீபதிஃ என்று வேதவாக்குடன் துதிக்கும் நன்னாடாகும். பக்தியின் மாட்சிக்கு இந்தியாவிலுள்ள பக்தர்களின் பெருமையே விளக்கும்சாதனம். பண்டரீபுர பக்தரும், அறுபத்து நால்வரும், மற்ற பக்தசிகாமணிகளின் பக்திக்கு நிகராக வேறு இதர தேசத்தில் மலிந்துள்ளனவோ? சங்கரர், ராமனுஜர், புத்தர், இயேசு, முகம்மது, நபிநாயகம் முதலானவர்கள் மதஸ்தாபகர்களன்றோ. இவர்களும் சர்வேஸ்வரன் ஒருவனை பஜித்தே பக்தராய் விளங்கினர். இதர மதங்கள் மதஸ்தாபகனையே மூல வஸ்துவாக வணங்கி பின்பற்றுகின்றவர்களை உடைத்தாயிருப்பதுடன் பிறமதஸ்தரையும் பலவித சூழ்ச்சி செய்து, உபதேசம், பணம் ஸ்திரீ, முதலானவைகளைக்கொண்டும், பாடசாலை, மருந்துச்சாலை ஸ்தாபித்து அதன் மூலமாய் வரும் இந்துக்களையும் மற்றவரையும் தம்மவராக்கும் கிருஸ்துவமதத்தில் நம்மவரை இழுத்துக்கொள்ளுவது போன்ற பேரவா உடைத்திருக்கின்றன. அவர்கள் தீர்க்க தரிசிகளின் அமுத மொழிகளை பின்பற்றுவது குறைவாக தற்காலம் அம்மதத்தினர் விளங்குகின்றனர். உதாரணமாக குடி, அஹிம்சை, யாவருக்கும் ஹிதத்தைசெய்து சகோதர பாவமாயிருத்தல், கோபம் நீக்கி பொறுமையாயிருத்தல்,



சத்யம், தர்மம் முதல்வனிடம் முழுபக்தி முதலியவைகள் எம்மதத்திலும் குறைவே. தீர்க்கதரிசிகளாலாக்கிய கிரந்தம் குரான் பைபில் முதலியன.

இந்தியரிலும் சங்கர மத்வ இராமானுஜர் இயற்றியவைகளை விட எம்மதத்தினரும் உவந்து படிக்கும் பகவத்கீதை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவாலேயே செய்யப்பட்டதை உடைய நம் இந்து மதத்தை விட்டுச் செல்ல உண்மைபஞ்சமனும் சம்மதியான், அந்தோ! தற்காலம் அந்தணரும் பலரும் பிறமதத்தவரின் வலையிலகப்படலாயிற்று நம் இந்திய நாட்டு நிலைமை. தெய்வத்தையே நேராக துதித்து முக்தியடைவது மேன்மையோ தீர்க்கதரிசிகளையே துதிப்பது மேலானதோ நேயரே அறிக!

அந்தோ! இக்குறை நீக்கம் எப்பொழுதென்பீர்களோ ஒவ்வொரு இந்தியனும் பத்திரிகைகளை படித்து அறிந்து நடந்தாலன்றி நீங்கா. மேல் நாட்டில் ஒவ்வொரு சிறுவன் முதல் விருத்தன் வரையில் ஆண் பெண் அடங்கலும் பத்திரிகைகளை வாசியாதிருக்கமாட்டார்கள். படித்தபடி நடக்கவும் முயல்வது கடமையாக கொண்டிருப்பதால் லோக வியாபாரத்தில் சிறந்து விளங்குகின்றனர். ஆனால் அந்த சஞ்சிகைப்பத்திரிகைகளின் லக்ஷ்யம் பேரின்ப வழியில் நிற்பனவை என்று கூறமுடியாது. சிற்றின்ப உலக விவகார அவாவையும் டம்பம், பொறாமை, போட்டிவாதம், விடாமுயற்சி பேராசையையும் விருத்தி செய்வனவாக பெரிதும் விளங்குவன. அத்தேசங்களுடன் நம் நாட்டை ஒத்திட்டுப் பார்ப்பின் அந்தோ பத்திரிகைகள் இருப்பதோ வெகு குறைவு. படிப்போர் சுமார் கால் வாசிகூட இருப்பரோ என்பது சந்தேகம்.

"பத்திரிக்கை என்றால் என்ன என்பது அறியாதவர்களும் பத்திரிகை எதற்கு? எல் லாம் அவன் பிழைக்க உபாயம் எவன் இருந்தாலென்? எவன் இறந்தாலென்? நாட்டை ராவணன் ஆண்டாலென் ராமன் ஆண்டாலென்? உண்டு உழைத்து நிம்மதியாய் உறங்குவதே மனிதனின் கடன்" என்ற கொள்கையுடன் வார்த்தையாடும் இந்திய சகோதரரும் இல்லாமலில்லை. கடவுளே!

பத்திரிகை அவசியத்தைக் கூறி தனிகரை சந்தாதாராக்க முயலும் பத்திரிகாபிமானிகளிடம் மேற்கண்ட உறையாடும் நண்பர்களிருப்பது கண் கூடாம்.

நம் நாட்டு தற்கால ஸ்திதியையும் பூர்வ நிலைமையையும் பிற நாட்டு நிலைமைகளையும், பத்திரிகைகளின் அவசியத்தையும் நம்மவர்கடமையையும் இடித்துரைத்து அவர்களைக் கூடியவரையில் திருப்புவது அறிவோர் கடன். தேசத்திற்கு செய்யும் பேருதவி. பாரத வீர சகோதர சகோதிரிகளே! தாய் நாடுய்ய தமிழ் விளங்க நம் அறிவுவரை, சத்வகுணம் நிறைய அவனருள் அடைய பத்திரிகைகளை தமிழ் பாஷாபிமானிகளாய் ஆதரித்து அதன் பயனை அடைவீராக. சச்சிதானந்தன் சர்வவல்லமை நமக்கு அளிப்பாராக. ஓம் தத் ஸத்.

குறம்பேரி நா. கிருஷ்ணசாமி ஐயர்,
ஆரம்பர் ஆசிரியன் நாட்டரம்பள்ளி.

குறிப்பு:—மேற்கூறிய விஷயங்களின் அபிப்பிராயம் நமது சொந்த அபிப்பிராயமன்று.

பத்திரிகாசிரியர்.

# வேதாந்த வசனம்.

(71-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பொருள்கள் தோறும் நிலைத்தவையா? அல்லது எல்லாவற்றிற்கும் சத்தாயும் ஆத்மாவுமான ஈசுவரனிடத்து நிலைத்தவையா?

இரண்டாம் வினா:—ஈசுவரனென்பவன் எப்படிப்பட்டவன்?

ஜகத்திற்குக் கர்த்தாவான ஈச்வரன், குடத்திற்குக்குயவன் போல, அதற்குப்புறம்பானவனா? அல்லது, பாம்பிற்குக்கயிறு போல ஜகத்திற்கு ஆதாரமானவனா?

மூன்றாம் வினா:—ஜீவனென்பவன் எப்படிப்பட்டவன்?

ஜீவத்தன்மையானது உள்ளேயுள்ள ஆத்மாவிற்கு இயற்கையாயுள்ளதா? அல்லது, அவ்வாத்மாவிற்கு உபாதிச் செயற்கையினால் ஆனதா?



நான்காம் வினா:—எல்லாவற்றினுடைய 'ஆத்மா' என்பவன் எப்படிப்பட்டவன்?

ஈசுவரன்தான் வாஸ்தவத்திலே எல்லாவற்றினுடைய ஆத்மாவா? அல்லது, உபசாரவழக்கினால் அவன் அவ்வாறு கூறப்படுகின்றானா?

ஐந்தாம் வினா:—ஜீவன் அதனை எப்படி அறியக்கூடும்? ஈசுவரன்தான் வாஸ்தவத்திலே எல்லாவற்றினுடைய 'ஆத்மா' வானால், அதை, ஜீவன் எப்படி அறியக்கூடும்?

ஆறாம் வினா:—அதனை அறிவதற்குக் கருவியாது?

எல்லாவற்றினுடைய 'ஆத்மா'வான அதனை 'ஜீவன்' அறிய வழியாது?

ஏழாம் வினா:—அதனை அறிவதனால் பயன்யாது?

எட்டாம் வினா:—மேலும், ஜீவனும் ஈசுவரனும் ஒன்று என்பது எவ்வாறாகும்?

ஒன்பதாம் வினா:— முற்றுமுணர்ந்தவனாய் எல்லாவற்றையும் செய்கின்ற ஈசுவரன் ஜீவனாக எப்படி ஆவான்?

ஜீவனான 'ஆன்மா' சிற்றுணர்வினன், சிறுதுசெய்பவன். ஈசுவரனோ முற்றுமுணர்ந்தவன், எல்லாம் செய்பவன். இவ்வாறு இவர்தம்முள் விரோத இயல்பினர். ஆதலால், இவ்விருவரும் ஒன்று என்பது உபசாரவழக்கா? அல்லது, இவரது விரோத இயல்பு போலியாயின், இவ்விருவரும் வாஸ்தவத்திலே ஒன்றுதானா? என இவ்வாறு மாணாக்கன் வினவ 'குரு' விடை கூறத்தொடங்கினர்:

கண்ணாடியிற் காணப்படும் பட்டணம் போன்றதாய், ஆத்மாவினுள்ளேயுள்ள பிரபஞ்சத்தை, தூக்கத்தினால்போல, ஆத்மாவினிடத்து மயக்கத்தினால் வெளியிற்றோன்றியது போல் காண்கின்ற எந்த ஆத்மப்பொருளானது விழிப்பு சமயத்திலே இரண்டல்லாத தன் ஆத்மாவையே நேரக்காண்கின்றதோ, அந்த ஸ்ரீமதாசார்யஸ்வரூபயான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.

மாடமாளிகை முதலியவற்றோடு கூடிய பட்டணமானது, கண்ணாடியினுள் வாஸ்தவமாகவே இல்லாதாயினும், அது அதனுள்

இருப்பது போலவே தோற்றுகின்றது. அது போல மலை கடல் முதலியவற்ருேடு கூடிய இப்பிரபஞ்சமானது ஆத்மாவினுள் வாஸ்தவமாக இல்லாதாயினும், அஃது அதனுள்ளிருப்பது போலவே தோற்றுகின்றது. இனி, இவ்வாருக இப்பிரபஞ்சம் வெளியில் இல்லாதாயினும், ஆத்மாவிற்குப் புறம்பாக வெளியிற் காணப்டுகின்றதே? எனில்,- தூங்குகின்றவன் தன்னுள் வாஸநாமயமாயுள்ள கனவுப்ரபஞ்சத்தை தூக்கத்தால் வெளியிலிருப்பதுபோலக் கண்டு அனுபவிக்கிருன். ஆனல், தூக்கமொழிந்து விழித்துக் கொண்டவளவிலே கனவு ப்ரபஞ்சமற்ற தன்னை மாத்திரமே நேரே கண்டு நிற்கிருன். அதுபோல ஒருவன் தன்னுள் நிலம் நீர் முதலிய பூதவடிவாயுள்ள இப்ரபஞ்சத்தை, மயக்கத்தினுல் வெளியிலிருப்பது போலக் கண்டு அனுபவிக்கிருன். ஆனல் அவன் 'குரு' வினது அருளினுல் உபதேசிக்கப்பெற்ற மஹாவாக்யப்பொருளைத் தெளிந்து உணர்ந்தவளவிலே, இப்ரபஞ்சமற்ற தன் ஆத்மாவை மாத்திரமே, தன் நிலையையே, தன்வடிவத்தையே, தன்னையே, "நான் ஒளி அறிவான ஆனந்தமாய் இதோ இருக்கிறேன்" என நேரே கண்டு நிற்கிருன்.

"குருவே ஈசுவரன்" என்று காட்டுவார் "ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணுமூர்த்திக்கு" என்ருர். "ஆத்மாவே அந்த குருவும் ஈசுவரனுமாம்," என உணர்த்துவார். "எந்த ஆத்மப் பொருளானது............காண்கின்றதோ அந்த ஸ்ரீ மாதசார்யஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணுமூர்த்திக்கு" என்ருர். எனவே, மெய்யறிவை அருளுகின்றகுருவும், ப்ரஹ்மமான ஈசுவரனும், தன்ஸ்வரூபமான ஆத்மாவும் உண்மையிலே ஒரே பொருள் என்பதாயிற்று.

" கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்கமுதற்கற்றகேள்வி
வல்லார் கணல்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக் கப்பாலாய்
எல்லாமாயல்லது மாயிருந்ததனையிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம நினைந்துபவ தொடக்கை
வெல்வாம்."



ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி-தென்திசையை நோக்கியவடிவினையுடைய பெருமான். ஆலமரத்தின் கீழ் குருவாக வீற்றிருந்து, சநகர் முதலிய உயர்ந்த ஞானிகட்கு ஞானேபதேசம் செய்த சிவபெருமானுடைய அந்தத்திரு அவதாரத்திற்கு "தக்ஷிணுமூர்த்தி" என்று பெயர். அல்லது, இதற்கு, "இன்னதென்று சொல்லவாராத மாயா சக்தியினுல் உலகங்களைப் படைத்து, நிலைபடுத்தி, அழித்து அமைப்பதிலே வல்லவனுயினும், வாஸ்தவத்திலே உருவில்லாத பரம் பொருள் எனவும் ஸ்ரீ=மாயாசக்தி; தக்ஷிண=தேர்ந்த; அமூர்த்தி =உருவற்றவன் எனவும் பொருள். (தொடரும்.)

**பக்தன்.**

---

# பிரகிருதி ஆராய்ச்சி விளக்கம்.

(86-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சூரியனும் சுற்றிக்கோள்ளுகிறது.

பம்பரம் எவ்வாறு தன்னைச் சுற்றிக்கொள்ளுகிறதோ அது போல சூரியனும் தன்னைச்சுற்றிக்கொள்ளுகிறது. அவ்வாறு சுற்றிக்கொள்வதில் அச்சாணிபோன்ற ஒரு பகுப்பின்மேல் நின்று பம்பரம் ஆணிமேல் நின்று சுற்றிக்கொள்வதுபோல சுற்றும். இவ்வாறு அச்சாணிபோன்ற பகுப்பின் கீழ் அடிக்கும் மேல் தலைக்கும் பேர் துருவங்கள் என்று சொல்லுவார்கள். இந்த விதமாக துருவங்கள் மேலேயிருந்து சுற்றிவரும் சூரியனுன அக்கினிச் சுவாலை தன்னை சுமார் இருபத்தைந்து நாட்களில் ஒரு தரம் சுற்றிக் கொள்ளுகிறது.

சூரியனின் ஜ்வாலை

நமக்குத்தோன்றும் அஜ்ஜ்வாலையில் பல உலோகங்கள் (metals) உருகிய ஆவிகள் இருக்கின்றன. அந்த ஜ்வாலையில் இரும்பு செம்பு ஈயம் முதலிய லோகங்களின் ஆவிகள் இருப்பதாய் தெரிகிறது. அந்த ஜ்வாலையில் வேறு என்னென்ன இருக்கிறதென்று நமக்குத்தெரியாது. ஆனல் 40 லோகங்களின் ஆவிகள் இருப்பதாய் வானசாஸ்திரிகள் கூறுகிருர்கள்.

JL
144024.
031 00211, N 23P4
N23.13

### கிரஹங்கள்

நாம் முன்பு இஜ்வாலையான சூரியனை பல உலகங்கள் ஒவ்வொன்றும் தன்னைச்சுற்றிக்கொண்டே சூரியனையும் சுற்றுவருகிறதாகக்கூறினோம். இந்த உலகங்களுக்கு கிரஹங்கள் என்று பேர். இந்த கிரஹங்கள் ஆகாயத்தில் ஒளியை வீசுகின்றன. அவ்வொளி சூரியனது ஒளியின் பிரதிபிம்பமே. இக்கிரஹங்களில் சில நமது பூமிக்குச் சமீபமாயும் மற்றவை பூமிக்கு தூரமாகவும் உள்ளன. அவைகளின் அசைவை வெகு சுலபமாக நாம் அறிகிறோம். ஒவ்வொரு இரவிலும் இக்கிரஹங்களின் இடம்மாறுதல்களையும் பார்க்கிறோம். இப்பூமியைவிட சூரியனுக்கு சமீபமாய் இரண்டுகிரஹங்களை பார்க்கிறோம். அவைகளின்பேர் சுக்கிரனும் புதனுமாம். இப்பூமியைவிட சூரியனுக்கு தூரமாயிருக்கும் கிரஹங்களாவன; செவ்வாய், வியாழன், சனி ராகு, கேது. இங்கே கூறிய கிரஹங்களைத்தவிர்த்து வேறு சிறிய வஸ்துக்கள் கிரஹங்களைபோல சூரியனைச்சுற்றிவரலாம். ஆனால் நமது கண்ணுக்கு புலப்படவில்லை. ஆயினும் செவ்வாய்க்கும் வியாழனுக்கும் நடுவே சிறிய கிரஹங்கள் சிலவேளைகளில் அனலைக்கக்கி சுற்றுவதை பார்க்கிறோம். இவைகளையே நாம் வால் நக்ஷத்திரங்களெனக் கூறுகிறோம்.

### கிரஹங்களின் அளவும் தூரமும்.

ஸர் நார்மன் லாக்கியர் என்னும் வானசாஸ்திரி கிரஹங்களின் அளவும் தூரமும் புரியுமாறு அடியிற்காட்டியபடி விளக்குகிறார்:

இரண்டடி குறுக்களவு (diameter) உள்ள ஒரு பந்தை வைத்துக்கொள்வீர். அதுவே சூரியனாகும்.

அப்பந்துக்கு 164 அடி தள்ளி ஒருசிறிய கடுகை வைத்தால் அது புதனாகும்.

அப்பந்துக்கு 284 அடி தள்ளி ஒரு பட்டாணிக்கடலைப் பருப்பை வைத்தால் அது சுக்கிரனாகும்.

அப்பந்துக்கு 430 அடி தள்ளி ஒரு பட்டாணிக்கடலைப் பருப்பை வைத்தால் அதுவே பூமியாகும்.

அப்பந்துக்கு 654 அடி தள்ளி ஒரு குண்டூசியின் தலையை வைத்தால் அது செவ்வாயாகும்.



அப்பந்துக்கு அரை மைல் தள்ளி ஒரு கிச்சிலிப்பழத்தை வைத்தால் அது வியாழன்.

அப்பந்துக்கு அறரை பர்லாங்கு தள்ளி ஒரு சிறிய கிச்சிலிப் பழத்தை வைத்தால் அதுவே சனி யென்னும் கிரஹமாகும்.

அப்பந்துக்கு ஒன்றரை மைல் தள்ளி ஒரு சிறிய பூசனிப்பிஞ்சை வைத்தால் அது Uranus ராகு என்னும் கிரஹம்.

அப்பந்துக்கு 2½ மைல் தள்ளி ஒரு பெரிய பூசனிக்காயை வைத்தால் அது Neptune கேதுவாகும்.

இவ்வாறு வைத்துக்கொண்டோமானால் சூரியனது பருமனும் மற்ற கிரஹங்களின் பருமனும் தூரமும் நன்குவிளங்கும்.

இதையே மைல் அளவில் கூறுவோமானால் எவ்வளவாகிறதென்பதை அறிவீர்கள்.

| கிரஹங்கள். | | சூரியனிடத்திலிருந்து தூரம். | |
|---|---|---|---|
| 1. புதன் | ... | 35,000,000 | மைல். |
| 2. சுக்கிரன் | ... | 66,000,000 | ,, |
| 3 பூமி | ... | 93,000,000 | ,, |
| 4. செவ்வாய் | ... | 142,000,000 | ,, |
| 5 வியாழன் | ... | 483,000.000 | ,, |
| 6. சனி | ... | 880,000,000 | ,, |
| 7. ராகு Uranus | ... | 1,784,000,000 | ,, |
| 8. கேது Neptune | ... | 2,790,000,000 | ,, |

### நமது அறிவின் சிறுமை.

இதுகாறும் கூறப்பட்டவைகளை மனிதன் தனது புத்திதீக்ஷணியத்தாலும் பலவகை தூரதிருஷ்டிக்கருவிகளாலும் மேற்கூறிய எட்டு கிரஹங்களும் சூரியனைச்சுற்றி வருவதாக அறிந்தான். இவைகளைத் தவிர்த்து வேறு கிரஹங்கள் சூரியமண்டலத்தில் சூரியனை சுற்றுகின்றனவா என்ற கேள்வை கேட்கலாம். சாஸ்திரிகள் இதுவரை கண்டுபிடித்தவை இவ்வெட்டே. மனிதனுடைய அறிவு நாளுக்குநாள் விர்த்தியடைந்து வருகிறதால்

இனிமேல் வேறு கிரஹங்கள் சஞ்சரிப்பதை கண்டுபிடிக்கக்கூடும். ஆனல் வேறு கிரஹங்கள் இன்னும் தூரத்தில் இருப்பதற்கு அறிகுறிகள் இருப்பதாகமட்டும் பல நிபுணர்கள் கூறுகிறார்கள்.

**சந்திரன்.**

இதுகாறும் கிரஹங்களைப்பற்றிக்கூறினேம். இப்போது வேறொரு பொருளைப்பற்றி கூறுவோம். அது சந்திரனுகும். எப்படி சூரியனைச்சுற்றி பூமி வருகிறதோ அதே விதமாக பூமியைச்சுற்றி சந்திரன் வருகிறது.




இச்சந்திரன் என்பது இப்பூமியைச்சுற்றிவரும் ஒருபிண்டமெனக் குறித்தோம். இவ்வாறுன பிண்டம் பூமியை சுற்றிவருவது போல மற்ற கிரஹங்களுக்கும் உண்டா? அதாவது மற்ற கிரஹங்களுக்கும் சந்திரன் அல்லது சந்திரன்கள் உண்டா? வான சாஸ்திரிகள் சில கிரஹங்களுக்குமட்டுமே சந்திரன் உண்டென்றும் மற்றவைகளுக்கு சந்திரன் கிடையாதென்றும் கூறுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| புதன் : | சந்திரன் | இதற்கு கிடையாது |
| சுக்ரன் : | ஷை | ஷை |
| பூமி : | சந்திரன் | 1. இதற்கு உண்டு. |
| செவ்வாய் : | சந்திரன்கள் | 2. ,, |
| வியாழன் : | ,, | 9. ,, |
| சனி : | ,, | 9. ,, |
| ராகு (Uranus) : | ,, | 4. ,, |
| கேது (Neptune) : | சந்திரன் | 1. ,, |



**விழு நக்ஷத்திரங்கள்.**

மேற்கூறியவைகளைத்தவிர்த்து வேறு பொருள்களை நாம் ஆகாயத்தில் இரவில் பார்க்கிறோம். இரவில் நாம் வானத்தைநோக்கியிருக்குங்காலத்தில் சிலவேளைகளில் ஒரு இடத்திலிருந்து வெளிச்சமுள்ள வஸ்து திடீரென்று வந்து அவ்விடமிருந்து சொஞ்சதூரம் வேகமாய்ப்போய் பிறகு நமது கண்ணுக்குத்தெரியாமல் போய்விடுகிறது. இவைகள் நக்ஷத்திரங்கள் அல்ல. சிறிய பந்துபோன்ற வஸ்துக்கள் ஆகாயத்தில் பறப்பவைகள். அவைகளை பூமியாவது மற்றுமுள்ள கிரஹங்களாவது இழுத்துக்கொள்ளும். இவ்வாறு இழுக்கப்படும்போது அவைகள் வேகமாய் ஆகாயத்தில் செல்லுகின்றன. செல்லும்போது ஆகாயத்தில் உள்ள காற்றுடன் உரசி உஷ்ணப்பட்டு வெளிச்சமாய் இருக்கின்றன. சிலகற்கள் அதே மாதிரியாக ஆகாயத்தில் பறந்துபோனவைகள் பூமியால் இழுக்கப்பட்டு பூமியில் விழுந்திருக்கின்றன. அவ்வாறு பூமியில் விழுந்தவைகள் பொறுக்கப்பட்டு நமது தேசத்திலுள்ள காக்ஷிசாலைகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு விண்வீழ்கொள்ளி (meteors) என்று பேர். நக்ஷத்திரங்கள் மாதிரி ஆகாயத்தில் பிரகாசித்திருந்ததால் போலியான விழுநக்ஷத்திரங்களெனவும் கூறுகிறார்கள்.

(தொடரும்)

K. ஜகதீசன் பி. ஏ.

# தற்கால வித்தையின் நிலைமை.

(34-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இக்காலத்தின் இங்கிலீஷ் படிப்பின் யோக்கியதையை பார்ப்போம். இங்கிலீஷ் வாசிக்கும் பிள்ளைகளிடத்தில் இங்கிலீஷ் தெரியாத அவர்களின் பெற்றோர்களுக்கும் இதர சகலபந்துக்களுக்கும் அபரிமிதமான அன்பும் பெருமையும் இருப்பதை சாதாரணமாய் பார்த்து வருகிறோம். இதற்கு முக்கிய காரணம் தங்களுக்குத் தெரியாத பாஷையில் ஏதோபல அபூர்வசங்கதிகளை தங்கள் குழந்

தைகள் கற்றுவருவதாக நினைக்கிற பிரமமே யல்லாது அவர்கள் ஆங்கில வித்தையில் அதிநுட்பத்துடன் உழைத்து வருகிறார்கள் என்ற ஞானத்தினாலில்லை. அப்பெருமையினால் குழந்தைகள் எப்படி நடந்தாலும், என்ன நல்ல ஆசார வொழுக்கங்களை விட்டுவிட்டாலும் வேறு எவ்வளவு துர் அப்பியாசங்களை அனுஷ்டித்து வந்தாலும் அவைகளை கவனிக்காமலும், பயத்தினாலோ அல்லது வேறு எக்காரணத்தினாலோ, அவர்களை கண்டிக்கமுயலாமலும் பேசாமலிருந்து விடுகிறார்கள். ஸ்கூல் பைனல் அல்லது இன்டர் மிடியேட் பரீட்சையில் இரண்டொரு தடவை தன் சோம்பேறித்தனத்தினால் தவறி விட்டால் கூட குழந்தைகளை ஒன்றும் சொல்லாமல் அவர்கள் பரீட்சைக்கு உழைத்ததைப்பற்றி சிலாகித்துக்கொண்டு விதியையும் தெய்வத்தையும் பூர்ணமாய் நிந்தித்து விட்டு மறுபடியும் குழந்தைகள் எவ்வளவு பணம் கேட்டாலும் சலிப்பில்லாமல் கொடுத்தும், வருகிறார்கள். இதற்குள் குழந்தைக்கு கலியாணமாகி சம்சாரமும் வீட்டுக்கு வந்துவிட்டால் புருஷனுக்கு ஏற்படும் பரீட்சை தோல்வை முதலிய குறைவுகளுக்கெல்லாம் பழிக்கும் இதர கேடுகளுக்கும் அவள் ஆளாகிறாள். குழந்தைக்கும் வித்தை எவ்வளவுக் கெவ்வளவு மேலே ஏறவில்லையோ அவ்வளவுக்கவ்வளவு கோபமும் தௌஷ்டியகுணமும் அதிகாரமும் ஜாஸ்தியாகின்றன. கடைசியாய் படிப்பு ஏறாமல் வீட்டுக்கே சாச்வதமாய் வந்துவிடநேர்ந்தாலுங் கூட நழுவிப்போன ஆசாரம் திரும்புகிறதில்லை. குலக்கிரமமான ஸம்ஸ்கிருதம் அல்லது தான் பேசும்பாஷையிலுள்ள வித்தையை பூர்ணமாய் கற்றுக்கொள்ள இஷ்டம் வருகிறதில்லை. இழிவாகவும் தோன்றுகிறது. தெய்வம் மதம் என்ற விஷயங்களின் கோடியே தெரிகிறதில்லை. விருத்தாப்பியமடைந்துவரும் பெற்றோர்களுக்கு ஒருவித உதவியும் செய்கிறதில்லை. இவ்விதமாக ஒன்றுக்கும் லாயக்கில்லாதவனாய் மிருகப் பிராயத்துக் கொத்ததாயுள்ள ஜீவனத்தினால் காலங் கழிக்கிறான்.

இன்னும் கொஞ்சதூரம் படித்து பி.ஏ. தேறியிருப்பவனை எடுத்துக்கொள்வோம். வித்தையால் கரையேறி விட்டதாயும் இனி அதிலுள்ள சிரமம் ஒழிநததாயும் நினைத்து அதிலும் ஒரு ஜீவனோபாய விருத்தியிலிறங்கிவிட்டால் அவ்விருத்தியின் முயர்ச்சியிலிருந்து



இவன் வாசித்ததும் வாசிக்காததும் ஒன்றாகவே ஆகக்கூடியஸ்திதியில் ஏற்பட்டுவிடுகிறது. சம்பாத்தியமும் அநேகமாய் தன் வயற்றுக்கே போதுமோ போதாதோ என்ற ஸ்திதியாகத்தானிருக்கிறது. ஒருக்கால் பெற்றோர்களையும் ஆதரிக்கும்படியான ஒருஸ்திதியோ ஆவசியகமோ நேர்ந்தால், தன் கடமையை மறந்து ஏதோ தனது அபூர்வ சக்தியினால் லோகமுழுதும் காப்பாற்றிவருகிறதாக நினைத்து தன் குடும்பத்தில் பெரியோர்•சிறியோர் எல்லாரிடத்திலும் காண்பிக்க வேண்டிய மிகுந்த மரியாதையையும் கௌரவத்தையும் அபேட்சித்து தனது எவ்விதமான மூர்க்கத்தன்மையையும் அவர்கள் பொறுமையுடன் வகிப்பதைபார்க்க சந்தோஷப்படுகிறான். வீட்டில் நடக்கும் கோபதாப அதிகாரங்களுக்கு நேர்விரோதமாய் உத்தியோகமுறையில் தனக்கு மேல்பட்டவர்களிடத்தில் நடந்துகொள்ளும் காலத்திலும் அதேசந்தோஷத்துக் கொன்றும் குறைவில்லை. சிலசமயம் பெற்றோர்கள் ஏதேனும் மரியாதைப்பிசகாய் நடந்து விட்டாலாவது பேசிவிட்டாலாவது அப்போது குழந்தையிடம் படும்பாடு மிகவும் பரிதாபப்படத்தக்கதாகவே யிருக்கிறது. ஆனால் சம்சாரத்தின் பாடுமட்டும் மேன்மை ஸ்திதியை யடைகிறது

இவன் இங்கிலீஷ் தெரியாமல் வேதம் சாஸ்திரம் சங்கீதம் இவைகளில் பயிர்ச்சியான வித்வான்களை அவர்கள் நல்லொழுக்கத்திலிருந்தபோதிலும் ஒரு பொருட்டாக நினைக்கிறதில்லை அவர்களும் ஏதோ பாஷாப்பிரமத்தினால் இவனைப்பெரியவனாகவே நினைக்கவும் செய்கிறார்கள். கனாந்தம் வேதாத்தியயனஞ் செய்து கொஞ்சம் சாஸ்திரமும் வாசித்து சிஷ்டாசாரத்திலு மிருக்கும் ஒருவனை நமது பி ஏ. மனுஷியன் ஒருதிருணமாக நினைத்துப்பேசி அதிகாரத்தையும் செலுத்துகிறான். இருவர்களின் வித்தையின் தாரதம்மியத்தைப்பார்ப்போம். பி.ஏ. காரனின் வித்தை சுவைக்கும் உபயோகமில்லை; சபைக்கும் உபயோகமில்லை. இவன் வித்தையை ஞானத்திற்காக வாசிக்காமல் பரீட்சைக்காக அதிலும் கடைசி கிளாசுக்கு கடைசி மார்க்குக்கு எவ்வளவு வேண்டியதோ அவ்வளவுமே லெழுந்தவாரியாய் வாசித்து பிறருக்கு அதை எடுத்துச்சொல்லக் கூடியசக்தியேயிராமல் தானாக அதைப்பற்றி சிந்தனை செய்வதற்கும் இடமின்றி இருட்டில் செய்யுங் காரியங்களைப்போல் எழுத்து மூல

மாய் கேழ்க்கும் சிலகேழ்விகளுக்கு தனக்கு அரைகுறையாய் தெரிந்ததும் பூர்ண சந்தேகமுள்ளதுமான பதில்களை எழுத்து மூலமாகவே மூடிவிட்டு துறந்து பார்ப்பின் அதுவாசனையுள்ளதாயிருக்குமோ அல்லது துர்நாற்ற முள்ளதாயிருக்குமோவென்ற உணர்ச்சிக்குக் கூட இடம் வைக்காமல் திருப்தியாய் நின்று பரீட்சையின் பலனும் காகித மூலமாய் தெரியவந்தவுடன் ஆநந்தத்தில் மூழ்கி அறைகுறைபாய் வாசித்த வித்தையின் பாரத்தையும் எறிந்து பரமசந்துஷ்டனாகிறான். ஸதஸில் நான்குபேருக்குமுன்னால் இவனது வித்தை பிரகாசமாகாது. வாயால் பிரகாசிக்காவிட்டாலும் எழுத்தினால் கிரந்தங்கள் மூலம் பிரகாசிக்கிறதுமில்லை. இவனிடத்தில் வித்தை பூர்ணமாயும் நிஸ்ஸந்தேகமாயு மிருந்தாலல்லவோ எந்தவிதத்திலாகிலும் பிரகாசிக்கும். வித்தை சதஸில் பிரகாசித்த பிறகுதான் கிரந்த மூலமாய் பிரகாசிக்கும். வேதசாஸ்திரம் கற்றவன் தன் வித்தையின் பிரபாவத்தால் பெருமையடைந்து சம்பாதிக்கிறான். அப்படியே சங்கீத வித்வான். அப்படியே மற்றுமுள்ள தொழிலாளிகள். ஆனால் நமது பி. ஏ. காரருக்குமட்டும் கூலி வேலைக்காரன்போல் வேலை கொடுக்கிறவனைத் தேடக்கூடியஸ்திதியிலிருக்கிறது. இவ்விடத்தில் பி. ஏ. என்று சொன்னது விவகாரம் வைத்தியம் இதுகள்தவிற மற்ற எல்லாப்பட்டங்களுக்கும் பொதுவாய் வைத்துக் கொள்ளலாம்.

மேல்கண்ட தோஷங்கள் இங்கிலீஷ் வித்தையிலுள்ளவையாக நாம் சொல்லவில்லை. நமக்கு கற்றுக்கொடுக்கும் முறையிலிருந்தும் நாம் கற்றுக்கொள்ளும் விதத்திலிருந்தும் ஏற்படுகின்றன. நமக்கு எல்லாம் தெரிகிறதாக பாவனை. ஆனால் ஒன்றும் தெரிகிறதில்லை. எல்லாவற்றிலும் சிறிது சிறிது கோடி காண்பிக்கப்படுகிறது. ஆனால் ஒன்றிலும் பூர்ணஞானமில்லை. அடியும் தெரிகிறதில்லை நுனியும் தெரிகிறதில்லை. ஆகையால்தான் அதை நாம் சொந்தமாக்கிக் கொண்டு மேலும் சிந்தனை செய்து விருத்திசெய்ய சக்தியற்றவர்களாயிருக்கிறோம். இதர தேசங்களில் ஸைன்ஸ் பயிர்ச்சியினால் சிந்தனைசெய்து அநேகர் ஜனங்களுக்கு உபயோகப்படக் கூடிய அரிய பல யந்திரங்களையும் சாமான்களையும் கண்டுபிடிக்கிறார்கள். நமக்கு ஸைன்ஸ் சாஸ்திரத்தை கற்பித்துவரும் பயன் நாம் பள்ளிக்



கூடத்தில் ஏதோ சில கண்ணாடி சாமான்களிருப்பதை வேடிக்கை செய்து உடையப் பார்க்கலாமென்ற சந்தோஷத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அதில் தேர்ச்சியடைந்த நமது நிபுணர்களும் செடி கொடிகளுக்கு உயிரிருக்கிறதாக ஸைன்ஸ் மூலம் ருஜுப்படுத்துகிற ஸ்திதியிலிருந்து களிப்படைந்து வருகிறார்கள்.

இந்த மாதிரி நாம் கற்றுவரும் ஒவ்வொரு விஷயமும் பூர்ணமாயும் நிஸ்ஸந்தேகமாயு மிராததால் நமக்கு அது ஒரு பிறயோஜனத்துக்கும் காரணமாகிறதில்லை.

(தொடரும்)

டி. வி. பாலசுப்பிரமணிய சாஸ்திரியள்,
எம். ஏ. எம். எல்.

## ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர்.

(78-ம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறு இருக்கும் சமயத்தில் இங்கிலாந்தில் ஒரு சம்பவம் உண்டாயிற்று. இந்திய மாப்பெருங்கிழவரெனப் பட்டமடைந்த தாதாபாய் நௌரோஜி இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டில் தான் பிரதிநிதியாக வேணுமென்று ஏற்பாடுகள் செய்தார். இக்காலத்தில் இந்தியாவில் ஒரு முனிசிபாலிட்டிக்கோ அல்லது சட்டசபைக்கோ ஒரு இந்தியன் போவதற்கு ஏற்பாடுசெய்வது நாம் அறிந்திருக்கிறோம். நமது வோட்டர்கள முக்காலே மூணுவீசம் பேர்களுக்கு தாங்கள வோட்டர்களாவென்பதே தெரியாது. தெரிந்த சிலர்கள் தெரியாதபலர்களை கூட்டிவந்து தனக்கு வேண்டியவருக்கு வோட்டு கொடுக்குமாறு செய்யச்சொல்வதை நாம் கண்டிருக்கிறோம். அல்லது கொஞ்சம் அகடவிகடசாமர்த்தியன் யாரையேனும் கூட்டிவந்து பயத்தாலும் நயத்தாலும் வஞ்சனையாலும் ஓட்டுகள் ஒருவர் அடையுமாறு செய்துவரவும் கண்டிருக்கிறோம். அல்லது ஒரு பெரிய ஜமீன்தார் அல்லது பணக்காரர் அறிமுகம்பெற்று அவரது கருணையால் பலவோட்டுகளை சம்பாதிப்பதையும் பார்த்திருக்கிறோம். அவ்வளவு வோட்டர்களும் இவரை நாம் சபைக்கு

அனுப்புமாறு லாயக்குள்ளவரா யில்லையா என்று கவனிக்கக்கூடத் தெரியாது. பொதுவாய் விவரம் தெரிந்த ஓட்டர்களுக்குக்கூட லாயக்கு என்பதை எதற்குக் கவனிக்கவேணுமென்றும், இவர் அச்சபைக்கு சென்றால் இவர் என்னசெய்யக்கூடும் என்றும், இவரும் கும்பலோடு கோவிந்தா போடுகிறவர்தானென்றும், ராமனாண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்னவென்றும், எண்ணங்களிருக்கின்றன. அப்படியே யோக்யதையுள்ள ஒருவர் சபைக்குபோனால், நிர்வாணதேசத்தில் கோவணம் பூண்ட பைத்தியக்காரர் போலிருந்து தன் தனிநிலைமையறிந்து, பட்டங்களுக்காசைப்பட்டு தன்னை நியமனம்செய்த ஜனங்களைச் சிறிதும் கவனியாமல் இருந்து வருவது சகஜம்.

ஆயினும் இங்கிலாந்திலோ ஓட்டுக்கொடுப்பவர்கள் எல்லாரும் சமாசாரம் தெரிந்தவர்கள். சபைகளுக்கு தாங்கள் தேர்ந்தெடுப்பவர் தங்கள் கருத்தின்படி நடந்து வராவிட்டால் அவர்களைக்கண்டனம் செய்வார்கள். இன்னும் சபைக்குப்போவதற்கு ஓட்டுகள் அவர் கேட்குங்காலத்தில், இன்னின்ன குறைகளைத்தீர்க்க என்னென்ன செய்யப்போவீர் என்றும் கேட்பார்கள். இவைகளுக்கு தகுந்தபடி சொல்லி ஓட்டுக்கள் சம்பாதிக்கவேண்டும். இவைகள் சாதாரணமாய் ஒரு ஆங்கில சபை நாடுபவனுக்கே (Candidate) கஷ்டமாயிருக்கும். அப்படியிருக்கையில் தாதாபாய் நௌரோஜி ஆங்கிலேயராக வில்லாமலும் இந்தியராயும் இருந்துகொண்டு அவ்வாங்கிலேய ஓட்டர்களின் ஓட்டைக்கேட்பது எவ்வளவு கஷ்டமாயிருக்கும்! இதற்குமுன் ஓர் தடவை இத்தாதாபாய் நௌரோஜி பார்லிமெண்டு சபைக்கு மெம்பராகவேண்டி நின்று தோல்வியடைந்தவர். இங்கிலாந்திலுள்ள பின்ஸ்பெரி (Finsbury) என்ற பாகத்துக்கு இவர் நின்றார். இவருக்கு ஜயம் உண்டாக பல்லோர்கள் சகாயம் வேண்டும். இவரது குணங்களையும் இவர் அங்கு நியமனமானால் இன்னின்ன காரியம் இன்னின்ன கருத்துடன் செய்யப்போகிறாரென்று ஓட்டர்களுக்குச்சொல்லவும் ஓட்டர்களைச்சேர்த்து ஓட்டுசெய்யும் இடத்துக்கு சேர்ப்பிக்கவும் பல ஆங்கிலர்களும் உதவிபுரிந்தார். அப்போது நமது சித்தரஞ்சன தாஸரும் பல பொதுக்கூட்டங்கள் சேர்ப்பித்து உபன்யாஸித்து தாதாபாய்



நௌரோஜிக்கு உழைத்தார். பார்லிமெண்டில் பிரதிநிதிஸ்தானம் நௌரோஜிக்குக்கிடைத்தது. தாதாபாயும் சித்தரஞ்சனதாஸர் செய்த உதவிக்கும் எடுத்துக்கொண்ட ஸ்ரமத்துக்கும் நன்மொழிகள் கூறி ஆசீர்வாதம் செய்தார். சித்தரஞ்சன தாஸருக்கும் தாதாபாயின் வெற்றியின் மூலம் உவகை மேலிட்டது.

பிறகு சித்தரஞ்சனர் பாரிஸ்டர் பரிக்ஷையில்தேறி இந்தியா வந்து சேர்ந்தார். இந்தியாவிலுள்ள பலதேசபக்தர்கள் இவரைக் கொண்டாடினார்கள். கல்கத்தா ஹைகோர்ட்டில் வக்கீல் உத்தியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்தார். தனது தகப்பனார் ஓர் இன்ஸால்வெண்டு என்று ஆனவிஷயமாகவும், எவ்விதமிருப்பினும் தான் ஒரு இன்ஸால்வெண்டின் மகன்தானேயென்றும், எண்ணி எண்ணி மனத்துயர்வுற்றார். யார் யார் தனது தந்தைக்கு கடன் கொடுத்தார்களோ அவர்களெல்லாருக்கும் எப்படியாவது கடனும் வட்டியும் சேர்த்துக் கொடுத்துவிடவேணுமென்று கருத்துக்கொண்டார். இவ்வெண்ணத்தாலேதான் அவர் தனது தந்தையின் ருணம் தீரும்வரை பொதுவிஷயத்தில் தலையிடவில்லை. இக்கவலையே இவருக்கு இருந்தது. பாரிஸ்டராக இருந்த ஆதிகாலத்தில் இவருக்குத்தகுந்தபடியான வரும்படி இல்லை. எப்போதும் வக்கீல்கள் தாங்களிருக்கும் ஊர்களில் பணவரும்படி வராவிட்டால் வெளியூர்களுக்குப் (Moffussil) போய் பணம் சம்பாதிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அதுபோல இவரும் வெளியூர் கேசுகளுக்கே அதிகமாய்ப்போய் திரவியம் சம்பாதித்தார். பணம் சம்பாதித்து ருணம் தீர்க்கும் எண்ணத்திலே ஈடுபட்டிருந்தார்.

(தொடரும்)

ஒரு தமிழன்.

## ஔடதம்.

ஔடதம் என்றால் தக்கமருந்து என்பது பொருளாகும். ஒருவன் வியாதியாயிருக்கையில் அவனுக்கு 'ஔடதம் கொடுக்க வேண்டும் என்றால் அவ்வியாதிக்குத்தகுந்த மருந்து அளிக்க

வேண்டுமேயன்றி இஷ்டப்படிசெய்யக்கூடாது. சிலர் ஔடதம் எனில் 'மருந்து' என்கின்றார்கள். அது தவறு. இவ்விடத்தில் நாம் கூறப்போகும் ஔடதம் பிறவி என்னும் வியாதியிலிருந்து நிவர்த்தி என்னும் சௌக்யத்தை அடைவதற்கு மருந்தாகும்.

இவடத்தில்,

புல்லாகிப் பூடாய்ப்புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற வித்தாவரச்சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்

என்று மாணிக்க வாசகாருளியது கவனிக்கத்தக்கது.

இம்மாதிரியாக புல்லிலிருந்து.........கடைசியில் மனிதராகிய நாம் இன்னும் சரியானவழியை யடையவில்லை. அரிவாளிருந்தா லல்லவோ பழத்தைப்பறிக்கலாம். அலக்கிருந்து யாது பிரயோஜனம்? நம்மை உண்டாக்கியதும் இப்ரபஞ்சம்—நம்மையழிப்பது மிப்ரபஞ்சம். நமக்கு இவ்வுலகிலுள்ள ஒவ்வொன்றும் அதியற்புத மான பொருள்களே, சாதாரணமாக வீதியில் பேசிக்கொண்டு செல்லுகையில் ஒருவன்பட்டாடைகள் கட்டிக்கொண்டுசெல்வதை நோக்கியதே," ஆ! இவன் எவ்வளவு ஜேவஜுக்காரனய்யா?" என்கிறோம். இம்மாதிரி பொன்மண்ணாசைகளும், பருவத்திற் பெண்ணாசையும் சேர்ந்து நம்மையே கெடுத்து விடுகிறது. நாம் என் இந்த அநித்யப்பொருள்களை நாடவேண்டும்? நாம் பிறந்தது போலவே போகிறோம். ஆனால் மற்றொன்று; அதாவது 'இனம் இனத்துடன்சேரும்' என்றபடி இந்தசரீரமே அநித்யப்பொருளாதலால் இது இப்ரபஞ்சத்தை நாடுகிறது. அதற்கு நாம் இடம் அளித்தற் பிசகு.

ஏனெனில் நம்மை நிழல் தொடர்வதுபோல், ஆன்மா வாகிய சத்து, அசித்தாகிய தேகத்தைவிட்டு பிரிந்தவுடன் நாம் செய்த கர்மங்களாகிய பாவ புண்ணியங்கள் நம்மைத் தொடர்கின்றன. ஆதலால் நாம் கர்மாநுஷ்டானங்களில் ஜாக்ரதையாக இருக்க



வேண்டும். இப்படிப்பட்ட கர்மத்தைப்பற்றி நாம் சற்று ஆராய்வோம்.

கர்மம் எனில் மனிதன் செய்யும் செய்கையெல்லாம் எனச் சொல்லலாம். கர்மம் இரண்டு விதப்படும். அவை: நற்கருமாக்கள். தீக்கருமாக்கள். ஒருவன் செய்யுங்கருத்திற் கேற்றபடி பொறுத்து பலன் சித்தியாகும், உடனே சித்தியாகிவிடாது. பள்ளிக்கூடத்தில் வைத்தவுடனே பிள்ளை எம். ஏ., (M.A.)பரீக்ஷை தேரிவிடமுடியுமோ? அதுபோலவே கர்மபலனும். ஆனால் சிலர் நம்மைகேட்கிறார்கள். "ஏன் ஒருவன் தானதருமங்களை செய்கிறான். அவன் செய்த இரண்டுவருஷத்தில் பெரிய உத்தியோகத்திலோ அல்லது வேறு ஏதோ ஒரு உயர்ந்தஸ்தானத்திற்கேறி விடுகிறானே. அது அவன் செய்த தானதருமங்களின் பலன்தானே" என்றதாகும். ஆனால் அன்னவர்கள் சற்று ஆராய்ந்து பார்ப்பின் உண்மையைதாமே யறிந்து கொள்வார்கள். அதாவது:—அவன் செய்த தானதருமங்களுக்கப்பலன் ஏற்காது. அவன் முற்பிறப்பிற் செய்த கர்மாக்களின்படி 'தானதருமம்' செய்ய எண்ணமும் வல்லமையும் அச்சர்வேச்வர னருளினர். அவன் உயர்தரப்பதவி யடைந்ததன் காரணம், அம்முற்பிறப்பிலேயே செய்த வேறொரு நற்கருமத்தின் பலனாகும்.

இனி ஒருவன் நற்கருமாச் செய்தால் அதற்குகந்த நற்பலனும், தீக்கருமாச் செய்தால் அதற்குகந்த பலனும் கிட்டும். நாம் நற்கருமாதான் செய்யவேண்டும், தீக்கருமா செய்யக்கூடாது; தீக்கருமாத்தான் செய்யவேண்டும் நற்கருமஞ் செய்யக்கூடாது என்ற விதி கிடையாது. "நீ நற்கருமாவைச்செய்; அதற்குகந்த நற்பலனை நீ யடைவாய், நீ தீக்கருமாவைச்செய்; அதற்குகந்த தீப்பலனை நீ யடைவாய்" என்றேஸம்ருதிகள் கூறுகின்றன. ஆனால் நாம் "தீப்பலனை" விரும்புவோமா? அல்லது நற்பலனை இச்சிப்போமா? எனில் உலகத்தில் எறும்புமுதல் ஏக சக்ராதிபதி வரையுள்ள யாவரும் நன்மை நாடுவரேதவிர்த்து தீமை நாடவிரும்பார். ஆதலால், "நீ நற்கருமைத்தைச்செய்" என் ஆன்றோர் கூறுகிறார்கள். ஆனால் ஒருவன் தீக்கருமத்தை செய்துவிட்டு "எனக்கு நற்பலன்

கிட்டவில்லை" என்று கூறினால் அது என்னபலனாகும். எட்டி விதை போட்டு மதுரமானமாங்கனி வேண்டுமென்றால் அது எங்ஙனங் கிட்டும். ஒருக்காலுங் கிட்டாது. இதை யொப்புடையதே கர்மம்.

ஒரு மரம் வளர்ந்தபின் அதன் பழம் உற்பத்தியாகும் வரை அது வளர்ந்தபின், அது வழியே, அதன் பழத்திலுள்ள விதைவீழ்ந்து செடியாகி மரமாகிப் பட்டுப்போய் அதன் விதை பிறகு மரத்திற் கேதுவாயிருக்கிறது. அதுபோல் நாம் செய்யும் கர்மாக்கள் மறு ஜென்மங்களுக்கு வித்தாகின்றன. அப்படியானால் ஜென்மமான இருட்கடலிலிருந்து கரையேறுவதெப்படியெனில், நற்கருமாக்களையே செய்துவரின் அதற்கு இணையற்ற பலனை கரையாகிய மோக்ஷத்தை யடையலாம். ஒருவர் வினவுகிறார்; "நீர்சொன்னவை சரிதான். ஒருவன் ஒருஜென்மத்தில் தீக்கருமாக்களையே செய்கிறான். அம்மாதிரி செய்யும்படியான கர்மத்தை அவன் முற்பிறவியில் செய்துளான். இம்மாதிரி இவன் தீக்கருமாக்களைச் செய்துவருவதில் மறுபிறவியில் அதற்கேற்ற தீப்பலனை அடைகிறான் (என்று நீரே கூறுகிறீர்). இப்படியாக இவன் தீக்கருமாக்களையே செய்துவரின் இவனுக்கு எப்பொழுது நற்கருமா செய்யத்தோன்றும், எப்படி கரையேறுவான்" என்கிறார்.

நண்பர்களே! இம்மாயப்ரபஞ்சத்தை சிருஷ்டித்த ஈசுவரன் இம்மாதிரியான செய்கைகளுக்கு வழி செய்யாதிருப்பாரா! அதற்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான், "நான்குவருணத்தாருக்கும் 'கடமை' என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அந்தக்கடமை மஹாபாதகமாகவிருந்தாலும் அவன் அதை நிறைவேற்றினால் ஒருவரு மடையமுடியாத பேரின்பவீட்டை யடைகிறான். ஆதலால் ஏ! அர்ச்சுன! உனது விரோதிகள் சகோதரர்களாயிருந்தாலும் சரி. குருமார்களாயிருந்தாலும் சரி. தாய்தந்தையராயிருந்தாலும் சரி. நீ யுத்தம் செய்ய வேண்டியதுன்கடமை ஆதலால் ஏ தனஞ்ஜய! நீவிசனப்படாது யுத்தஞ் செய்" என்று கீதையிற் கூறுகிறார். ஆதலால் அவரவர் கடமையைச் செய்தால் எப்பேர்ப்பட்ட தீக்கருமத்தைச் செய்தாலும் அவன் முத்தியை யடைவது நிச்சயம். ஆதலால் இதிலிருந்து கடமை மிக்க அவசியமாகிறது.



ஒருவன் "ஆன்ம சுத்தம்" ஆகவேண்டுமெனில் தான் சுத்தமாயிருத்தல்வேண்டும் மற்றொன்று "ஆன்மாவிற்கு அசுத்தமே கிடையாது. ஒருகண்ணாடி யிருக்கிறது. அந்தக் கண்ணாடிமேற் றூசுபடிந்திருந்தால் உண்மையிற் கண்ணாடி பொட்டைக்கண்ணாடியா? அல்ல! "ஆன்மா" மகாபரிசுத்தமானது. அதன்மேற் கண்ணாடிமேற் றூசுபடிந்திருப்பதுபோல் மனம் அசுத்தமாகப்படிந்துள்ளது. ஒருவனுக்கு மனம் பரிசுத்தமாகவேண்டுமெனில் அந்தஸ்தூலம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். இதற்காகவே ஸ்நானவிதி ஏற்பட்டிருக்கிறது. ஆன்றோர் வீணாக ஒன்றையும் விதிக்கவில்லை. உலகத்திலுள்ளயாவும் உத்தமமானதே. ஒருவன் தேகம் பரிசுத்தமாயிருந்தால் 'மனம்' சுத்தமாக இருக்கும். ஆதலால் தேகசுத்தமும் மனோ சுத்தமுமே "ஆன்மசுத்தத்தை" யளிக்கிறது. தேகசுத்தமிருந்தால் மட்டும் போதாது. தேகமனோசுத்தம்வேண்டும். "மனோசுத்தம்" மட்டு மிருந்தாற் போதாது. ஆதலால் "தேகமனோபயிற்சி" யாவர்க்குமவச்யம். முடிவாக "ஆன்மா" பரமான்மா" வோடைக்யமாவது கடினம். நானும் அவனும் ஒன்றே என்றிருப்பவர் உலகம் மாயை, அநித்யமானது என்றறிந்து உலகப் பற்றை விட்டகன்றிருப்பர். ஆதலால் இந்த பிறவிக்கு ஔடதம் "தேகமனோசுத்தம்." மற்றும் எல்லாம் ஒன்றென இருப்பதே ஞானிகளாகும், அவர்களுக்கு மாயாவஸ்துவே கிடையாது (அதாவது அநித்தியமான மாயப்ரபஞ்சத்தை விட்டகன்றிருப்பர்). அவர்கள் "கானலில் தோன்றும் சலம்போலவும், கிளிஞ்சலிற்றோன்றும் வெள்ளிபோலவும், கண்ணாடியிற் காணப்படும் நகரம்போலவும், ஆகாயத்தில்தோன்றும் நீலம்போலவும், கயிற்றில் புலப்படும் அரவம் போலவும், கட்டையிற்காணப்படும் மனிதன் போலவும் நாமரூபமான இப்ரபஞ்சம் முழுமையும் அசத்தியமே. ஞானசொரூபமான பிரம்மம் ஒன்றுமேமெய்" எனவிருப்பர்.

"நானுமில்லை நீயுமில்லை யாருமில்லை யானதே" என்று அருணகிரி நாதர் அருளியபடி, தன்மையாகிய நானுமில்லை முன்னிலையாகிய நீயுமில்லை, என்னைத்தானாக்கிக்கொண்டு, தான்தானாக எங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சச்சிதானந்த சொரூபம் ஒன்றே யுள்ளது என்றபடிக்கும்.

" நானேயென்று மெவ்விடத்து நன்று யுண்டாயிருக்குகேன்
நானேயென்று மெவ்விடத்து நன்றாய் தோன்றி விளங்குகேன்
நானேயென்று மெவ்விடத்து நன்றாயின்பமாய் நிகழ்கேன்
நானேயென்று மெவ்விடத்து நன்றாய் விளையாட நிற்கேன் "

என ஸ்ரீ குமாரதேவ ஸ்வாமிகளும் கூறியிருக்க, தாயுமானவர் " நீயற்றவன்னிலேயே நிட்டையதினீயிலேயோ வாயற்றவனே மயங்காதே" என்றருளினர்.

"நித்தனும் பரமேசன் நானென்று நிச்சயிக்கின்
முத்தனல னெனினுமவன் முத்தனு முயிருடம்பின்
பெத்தமற ஞானத்தாற் காட்சிபெறின் சாந்தியுடைச்
சித்தனைப் பொருட்பற்றுத் தீர்த்துவீ டடையுமால்"

என்று தேவிகாலோத்தரத்தில் பரமசிவன் பார்வதி தேவியார்க்கு அருளியிருக்கிறர். மற்றும் திருமூல நாயனர்,

" அண்ணலிருப்பிட மியாருமறிகில
ரண்ண லிருப்பிட மாய்ந்து கொள்வார்களுக்
கண்ணலழி வின்றி யுள்ளே யமர்ந்திடும்
அண்ணலைக்காணி லவனிவனாமே"

என்றருளினர்.

ஆனல் இம்மாதிரியான நிலையிலிருப்பதரிது. நாம் கர்மாநுஷ்டானங்களைச் சரிவரசெய்ய, நமது "கடமை" நிறைவேறுமாறும் ஸ்ரீ சச்சிதானந்த சொரூபியாயும், அகண்டபரிபூரணமாய் எங்கணும் ஜோதிப்ரகாசனுயுள்ள சர்வேச்ரன் நமக்கருள்புரியுமாறு நாம் பிரார்த்திப்போமாக.

ஓம் சர்வம் சிவமயம்.

ச. பஞ்சாபகேச அய்யர்,



# " பைந்தமிழ் " பஞ்சாங்கம்.

(All rights Reserved.)

உருத்ரோத்காரிஞு சித்திரைமீ 1923ஞு ஏப்ரல்மீ மேமீ இங்கிலீஷ் 1923, கலியுகஞு-5023, சாலிவாகனஞு 1845, கொல்லம் 1098, விக்ரமசக 1980, ஹிஜரி 1341, பஸலி 1332, பிரபவாதி 57

| ஏப்ரல் மாதம். | சித்திரை மாதம். | கிழமை. | திதி. | | நக்ஷத்திரம். | | யோகம். | | புண்யகாலம் விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | 1 | வெள் | துவா | 1-10 | பூரட் | 49-4 | பிர | 47-32 | மேஷரவி 27-48, சூன்யதிதி, தமிழ் வரு [டப் பண்டிகை பிரதோஷம். |
| 14 | 2 | சனி | திர | 5-13 | உத் | 55-8 | மா | 48-38 | சதுர்தசிதிதி, சூன்யார்கம். |
| 15 | 3 | ஞாயி | சது | 10-4 | ரேவ | 60-0 | வை | 50-2 | .................. |
| 16 | 4 | திங் | ● | 15-6 | ரே | 1-33 | விஷ் | 51-28 | பிரதமாதிதி, சோமவார அமாவாசை |
| 17 | 5 | செவ் | பிர | 20-2 | அசு | 7-51 | பிரீ | 52-41 | திருச்செங் காட்டாங்குடி பிக்ஷாடன உத் |
| 18 | 6 | புத | துதி | 24-31 | பர | 13-53 | ஆயு | 53-26 | கரிநாள். [சவம். |
| 19 | 7 | வியா | திரு | 28-15 | கார் | 19-11 | சௌ | 53-30 | கார்த்திகை, அக்ஷயதிருதியா. |
| 20 | 8 | வெள் | சது | 30-54 | ரோ | 23-29 | சோ | 52-32 | திருக்கடையூர், திருவையாறு, திரிசிரபுரம், சீர்காழி, மதுரை, எட்டுகுடி திருமெய் யம் உத்சவம் |
| 21 | 9 | சனி | பஞ் | 32-19 | மிரு | 26-38 | அதி | 50-50 | கௌரீ விருதம், ஸ்ரீ குருசங்கர ஜயந்தி. |
| 22 | 10 | ஞாயி | சஷ் | 32-27 | திரு | 28-33 | சுக | 48-0 | சஷ்டி. [வா, உத்சவம். |
| 23 | 11 | திங் | சப் | 31-18 | புன | 29-11 | திரு | 44-7 | நரசிம்மர் கெருடசேவை, காஞ்சி கச்சபேச |
| 24 | 12 | செவ் | அஷ் | 29-0 | பூச | 28-41 | சூல | 39-26 | மழை 5-க்குள். வீரராகவர் கெருடசேவை, திருவையாறு அத்மபூஜை, சிவாலயங் |
| 25 | 13 | புத | நவ | 25-40 | ஆயி | 27-10 | கண் | 35-53 | நவமிதிதி. [களில் 5-ம் திருவிழா. |

| ஏப்ரல் மாதம். | சித்திரை மாதம். | கிழமைகள். | திதி. | | நக்ஷத்திரம். | | யோகம். | | புண்யகாலம் விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26 | 14 | வியா | தச | 21-26 | மக | 24-46 | விரு | 27-40 | திதித்வயம். |
| 27 | 15 | வெள் | ஏகா | 16-29 | பூர | 21-38 | துரு | 20-40 | சர்வ ஏகாதசி, மத்வஏகாதசி, ஹரிநாள். |
| 28 | 16 | சனி | துவா | 10-58 | உத் | 18-0 | வியா | 13-37 | சனிப்பிரதோஷம் ஆரம்பம, சிவாலயங்களில் மகாரதம், ஆதிகேசவர் ரதம். |
| 29 | 17 | ஞாயி | திர | 5-9 | அஸ் | 14-5 | அரி | 6-12 | நரஸிம்ம ஜயந்தி, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி உத்சவம், சிவா-ளில் சித்ராதீர்த்தம் முதலியன. |
| | | | சது | 54-0 | | | வச் | 52-21 | |
| 30 | 18 | திங் | ○பௌ | 53-6 | சித் | 10-2 | சித் | 50-56 | ஸம்பத் கௌரீ, சௌரசித்திரா பருவம். |
| 1 | 19 | செவ் | பிர | 47-38 | சுவா | 75-58 | விதி | 43-30 | திருவையாரு சப்தஸ்தான உத்சவம். |
| 2 | 20 | புத | துதி | 41-59 | விசா | 2-31 | வரி | 36-27 | காஞ்சி கச்சேபேச்வரர் தீர்த்தம், சனிவாரம் [ஹஸ் 3-வக். |
| | | | | | அது | 56-40 | | | |
| 3 | 21 | வியா | திரு | 38-34 | கேட் | 57-28 | பரி | 31-0 | பொன்னேறி சந்திப்பு உத்சவம். |
| 4 | 22 | வெள் | சது | 33-20 | மூல | 54-23 | சிவ | 23-54 | |
| 5 | 23 | சனி | பஞ் | 30-21 | பூரா | 53-43 | சித் | 18-40 | அக்னி-நக்ஷத்திர ஆரம்பம். |
| மே 6 | 24 | ஞாயி | சஷ் | 28-28 | உத் | 54-4 | சா | 14-48 | |
| 7 | 25 | திங் | சப் | 27-47 | சிர | 55-40 | சுப | 10-53 | |
| 8 | 26 | செவ் | அஷ் | 28-23 | அவி | 58-31 | சுப் | 8-29 | |
| 9 | 27 | புத | நவ | 30-13 | சத | 60-0 | பீரா | 7-4 | |
| 10 | 28 | வியா | தச | 33-18 | சத | 2-37 | மா | 6-36 | |
| 11 | 29 | வெள் | ஏகா | 37-12 | பூரட் | 7-44 | வை | 6-58 | |
| 12 | 30 | சனி | துவா | 41-51 | உத்ர | 13-38 | விஷ் | 7-59 | பிரதோஷம். |
| 13 | 31 | ஞாயி | திர | 46-50 | ரேவ | 19-56 | பிரி | 9-21 | |

| | | | |
|---|---|---|---|
| | ரவி புத | செவ் | |
| சுக் கே | 10௳ மீன-சுக் 15௳ மேஷ-புத | | |
| | | | ராகு |
| | | குரு | சனி |

PRINTED BY SOLDEN AND CO., FOR K. JAGADISAN, B.A. EDITOR AND PUBLISHER, MADRAS.

# அறிவிப்பு.

## சந்தா நேயர்கள் அவசியம் கவனிக்கவும்!

சந்தாதாரர்கள் தங்களுக்கு வரும் சஞ்சிகையில் விலாசத்தின் வலப்பக்கத்து மேற்கோடியில் குறிப்பிட்டிருக்கும் சந்தா நெம்பரை அவசியம் குறித்துக்கொள்ளவும். (ரிஜிஸ்டர்ட் நம்பரல்ல.)

விஷயதானம்புரியும் நண்பர்கள் தாங்கள் அனுப்பும் விஷயத்தை சுத்தமான காகிதத்தில் அரைஷீட்டில் (கால் பேபர் கூடாது) ஒருபக்கத்தில் தெளிவாய் எளிய நடையில் எழுதவேண்டும். விஷயம் மூன்று பேபர்களுக்குக் குறையாதிருக்கவேண்டும். அவை பொது நலமாயும் ராஜாங்கத்திற்கு விரோதமில்லாதவைகளாயுமிருக்கவேண்டும். அவைகள் சொந்தமாயும், வேறு துண்டுகளிலிருந்து எடுத்து எழுதினல் இன்னவற்றிலிருந்து எடுத்து எழுதபட்டது, என்றும் எழுதவேண்டும். அவசியம் அவைகள் பிரசுரம் செய்யப்படும்.

சந்தாதாரர்கள், சந்தா தொகையை அனுப்பும்பொழுது தங்களது பூரணவிலாசத்தையும் விஷய தானம்புரியும் நண்பர்கள் தங்கள் வியாசத்தினடியில் தங்களது பூரண விலாசத்தையும் எழுதி யெங்களுக்கறிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்கள் தாங்கள் எழுதும் கடிதங்களில் தங்களது சந்தா நெம்பரை குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மத்தியில் சந்தாதாரராகச் சேருபவர்கள் தங்கள் தொகையை மணியார்டர் செய்துவிடவேண்டும். அவர்கள் கூபனில் தங்கள் விலாசத்தை பூரணமாயெழுதி "நாம் ஒரு புதிய நபர்" எனவும் வரையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மத்தியில் சேரும் சந்தாதாரர்கட்கு, அவ்வருட ஜனவரிமீ முதற்கணக்கிடப்பட்டே சஞ்சிகை யனுப்பப்படும். அவர்களுக்கு அதுவரையில் வெளிவந்துள்ள சஞ்சிகைகள் சேர்த்து அனுப்பிவிடப்படும்.

சேர்ந்தாற்போல் 5 புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கும் சந்தா நேயருக்கு ஒரு ரூபாய் விலையுள்ள நாவல் இனாமாக அனுப்பப்படும். அங்ஙனம் சேர்ப்பவர் அவ்வைவரையும் தவிர வேறு ஒருவராயிருக்கவேண்டும்.

8. கடிதங்களை சஞ்சிகையில் பிரசுரிப்பது பத்திராதிபரை பொறுத்ததாகும். பிரசுரிக்கப்படவேண்டிய கடிதங்கள் சந்தேகமன்னியில் பிரசுரிக்கப்படும். சந்தேகம் தெளிவிக்கப்படவேண்டிய கடிதங்கள், அவர்கள் சந்தேகம் பொதுவாய் ஏற்படக்கூடியதாயிருந்தாலொழிய சஞ்சிகையில் பிரசுரஞ் செய்யப்படமாட்டா.

9. எந்தச் சந்தாநேயருக்கேனுஞ் சஞ்சிகைவந்து சேராவிட்டால் அவர்கள் அந்த மாதம் 15 தேதிவரைப் பொறுத்துப்பார்த்து வராவிடில், பிற்பாடு அதே தமிழ் மாத முடிவிற்குள் எங்களுக்கு அறிவித்துப் பெற்றுக்கொள்ளவேண்டும். பிறகு அறிவிப்போர் கிரய மனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

10. இரண்டு மூன்று பேர்க்குச் சேர்த்துப் பணம் அனுப்புவோர்கள் கூபனில் எல்லா விலாசத்தையும் தெளிவாய் வரையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் அல்லது ஒரே விலாசத்தை அறிவித்தால் அதற்கு அனுப்பிவிடுகின்றோம் பத்திராதிபர்.

## லோகோபகாரி.

ஆசிரியர். பரலி--சு. நெல்லை யப்ப பிள்ளை.

நல்ல வாரப் பத்திரிகையை விரும்பு கிறீர் களா?
சுய ராஜ்யத்தை விரும்பு கிறீர் களா?
இன்பமான பொழுது போக்கை விரும்பு கிறீர் களா?
புத்துயிரையும் புதிய ஊக்கத்தையும் விரும்பு கிறீர் களா?
சிறந்த செந்தமிழ்ப் பாடல்களை விரும்பு கிறீர் களா?
தேசச் செய்திகளை அறிய விரும்பு கிறீர் களா?
வேதாந்தம் படிக்க விரும்பு கிறீர் களா?
உலக விநோதங்களை அறிய விரும்பு கிறீர் களா?

அவ்வாறானால், லோகோபகாரிக்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். வருஷ சந்தா ரூபாய் நாலு. மாதிரிப் பிரதி இனாம்.

காரியஸ்தர்,
"லோகோபகாரி," சென்னை.

## வேதங்கள் தமிழில்.

இன்னொரு நூறு காப்பிகள் குறைந்த விலைக்குக்கொடுக்கிறோம்.

ரிக்வேதத்துக்கும் யஜுர் வேதத்துக்கும் பயிண்டு புத்தகங்களாக ரூ. 30. மாத ஸஞ்சிகைகளாக ரூ. 25. முன் பணமனுப்பவேண்டும்.

சிவத்தியானந்த மஹர்ஷி,
மானேஜர், வேதபீடம், 31-32, பார்வீதி, ரங்கோன்.

## தேசானுகூலன்.

இஃதொரு சிறந்த தமிழ்ப்பத்திரிகை வாரம் இருமுறை பினாங்கினின்று தேசீய ராசீயவிஷயங்களுடன் வெளிவருவது. இதன் அருமை பெருமை அவசியம் முதலியவற்றை வாங்கிப்படித்தறிந்து கொள்ளவேண்டுமன்றி எழுத வியலாது.

சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்ளூர் வெளியூர்கட்கு வருஷம் 1-க்கு நிங்கி $ | 10 | 0 | 0 |
| அல்லது ரூபாய் | 15 | 0 | 0 |
| 6-மீ க்கு நிங்கி $ | 5 | 5 | 0 |
| அல்லது ரூபாய் | 8 | 0 | 0 |

மானேஜர் தேசானுகூலன், பினாங்.

## "கிலாபத்" இனாம்!!!

இஸ்லாம் மார்க்க உண்மைகளையும் ராஜீய தேசீய விஷயங்களையும் தன்னுட்கொண்டு ராயல் 8 பக்கங்கொண்ட பெரிய ஸைஸில் ஒவ்வொரு சஞ்சிகையும் 48 பக்கங்களுடன் நல்ல உயர்தர கிளேஸ் காயிதத்தில் மிக நேர்த்தியாகச்செந்தமிழில் அச்சிடப்பட்டு ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலும் வெளியாகும் "தாருல் இஸ்லாம்" என்னும் இச்செந்தமிழ் மாதப் பத்திரிகைக்கு 1923-ல் சந்தாதாரராகச்சேரும் ஒவ்வொரு புதிய நண்பருக்கும் ஒவ்வொரு கிலாபத் புஸ்தகம் இனாமாகக்கொடுக்கப்படும். கொஞ்சம் பிரதிகளே யிருக்கின்றன. முந்துங்கள்! முந்துங்கள்!!

| | | | |
|---|---|---|---|
| வருஷ சந்தா ரூபா. | 3 | 0 | 0 |
| அயல் நாடுகளுக்கு ரூபா. | 4 | 0 | 0 |

மானேஜர்,
"தாருல். இஸ்லாம்" ஆபீசு, நாச்சியார்கோவில்.

## "கதாரஞ்சனி"

நாவல்நிறைந்த மாதசஞ்சிகை.

1922-ம் வரு ஜனவரிமீ முதல் நடைபெறுகிறது. இதில் இனிய தமிழ் நாவல்களே வெளிவரும். இப்போது மிக அற்புத நாவல் எழுதப்பட்டுவருகிறது. வருஷசந்தா ரூபா 1-4-0; வெளிநாட்டிற்கு ரூபா 2; தனி காப்பி 0-2-6.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ராஜலக்ஷ்மி | 0 | 10 | 0 | மதனசிங்கர் | 0 | 8 | 0 |
| கனகாங்கி | 2 | 0 | 0 | பூபாலன் | 1 | 12 | 0 |
| சரித்திர சந்திரிகை | 0 | 12 | 0 | பத்மநாபன் | 0 | 14 | 0 |
| இராஜாம்பாள் | 0 | 12 | 0 | திலோத்தமை | 0 | 8 | 0 |
| தசகுமாரன் | 0 | 6 | 0 | நீலமேகை | 1 | 0 | 0 |

இதர நாவல்களும் கிடைக்கும்.

ஸ்ரீவாணி விலாச லைப்ரரி,
79. சுப்பராய செட்டி தெரு, திருப்பாதிரிப்புலியூர்.

# சுதந்திரன்.

## பிரதி பானுவாரந்தோறும்

### வெளிவரும் ஓர் தமிழ் பத்திரிகை.

சென்ற 7 வருஷ காலமாய் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படியான விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய செல்வ விருத்திக்கான விஷயங்களும், மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் அவசியமான சுகாதாரம், நோய் பரிகாரம், மதுவிலக்கு முதலிய வியாசங்களுடன் வெளிவந்துகொண்டிருந்த "வர்த்தக மித்திரன்" தற்கால போக்கை யனுசரித்து, 23-4-22 முதல் "சுதந்திரன்" யென்னும் பெயருடன், இராஜீய விஷயங்கள், மகாத்மா அவர்களின் உபதேசம், இந்தியர் முன்னேற்ற மார்க்க விவரங்கள் முதலிய விஷயங்களுடன் வெளிவருகின்றது. சுயராஜ்ய மடைய விரும்புவோர் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை வரவழைத்துப் படித்து சகோதர, சகோதரி யாவரும் சுயராஜ்ய மடைந்து சுகஜீவிகளாக வேண்டும்.

வருஷ சந்தா இந்தியாவிற்கு ரூ. 6—2—0

சுதந்திரன் ஆபீஸ்,
தஞ்சாவூர்.

உனக்கு வேண்டியதும், நீ பார்க்க வேண்டுமென்று அநேக நாள் தேடிய சாஸ்திரம் இதுவே.

# சரீர மர்ம சாஸ்திரம்.

தமிழ் பாஷையில் இவ்வளவு பூர்ணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடவில்லை. பலவருஷங்கள் பாடுபட்டு, பலகிரந்தங்களை ஆராய்ந்துணர்ந்து வெகு பொருட் செலவில் தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் சரீர அமைப்பு சுகாதார சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம், சிசுஉற்பத்தி, சிசு பரிபாலனம், தாது நஷ்டம், ஸ்திரீ, புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைபோக்க தக்க சிகிச்சைகளும், விவாகமானவர்களுக்கும், இனிமேல் விவாகம் செய்து கொள்ளும் ஸ்திரீ புருஷர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய இல்லற இன்ப ரகசியங்களுடன் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில 50. படங்களுடன் அச்சிடப்பட்டது. விலை ரூபா 1—0—0 கொஞ்சம் காப்பிகளே அச்சிடுவதால் இது சீக்கிரம் செலவாய்விடும். பிறகுகிடைப்பதரிது. விலை ரூபாய் ஒன்று உடனே எழுதுங்கள்.

மானேஜர் :—
மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணாஜல முதலி வீதி,
சவுகார் பேட்டை, மதராஸ்,

600 008

# அத்திரியின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்

## குணமில்லாவிடில் விலையை வாப்ஸ் செய்யப்படும்.

இம்மருந்துகள் கல்கத்தாவில் டாக்டர் குப்தாவால் தயாரிக்கப்பட்டன.

(1) "அற்புதமெழுகு" எவ்வகை மூலம், சொறிகள், பௌத்ரம், கட்டிகள், மேகப்பத்துகள், கெட்டசிக்கினுல் உண்டான புண்கள், ரணங்கள் வகைபறாவை ஆப்ரேஷன் இல்லாமலே ஸ்வஸ்தமாக்கும். புட்டி 1-க்கு விலை ரூ. 1-12-0.

(2) "அமிர்த டானிக்" ஆண், பெண் வாலிபர், வயோதிகர் யாவரும் உபயோகிக்கலாம், இரத்தக்குறைவு, அசுத்த ரத்தம், பலஹீனம், கை கால் அசதி, தேகமெலிவு, நீர்த்தாரை எரிச்சல், தாது புஷ்டிக்குறைவு, அஜீரணம், மலச்சிக்கல், பித்தகுன்மம், பித்தவாயு, வியாபகசக்தியின்மை, முதலிய வியாதிகளைக் கண்டித்து, நரம்புகளுக்கு வலுவை கொடுத்து, தாது புஷ்டியளித்து இரத்த விர்த்தியையுண்டாகும். 8 அவுன்ஸ் பெரிய புட்டி 1-க்கு ரூ. 1-12-0.

(3) "படைஸம்ஹாரி" எவ்வகை படைகள், அரைகடிகள், சொறிகள், படர்தாமரை, முதலியவைகளை கண்டிக்கும். புட்டி 1-க்கு விலை அணு 6.

(4) "காது தைலம்" காதுவலி, குத்து, சீழ்வருதல், காதடைப்பு முதலியவைகளை கண்டிக்கும். புட்டி 1-க்கு அணு 10.

(5) "லவணவிலாஸ்" ஹேராயில். மூளைக்கொதிப்பை யடக்கி குளிர்ச்சி செய்து தலை முடிக்கும் அழகு அளிக்கும் ஆனந்தலாவனையுள்ளது புட்டி 1-க்கு விலை ரூ. 1-0-0.

(6) 'அத்ரி பல்பொடி' சாக்கட்டி இதில் சேர்க்கப்படவில்லை மருந்து மூலிகைகளும் கருவேலம் பட்டை, கல்நார், முதலிய மருந்து சரக்குகளுமே உபயோகிக்கப் பட்டுள்ளது. இதை உபயோகித்தால் பல் வெளுப்பாவதுடன், வாய் நாற்றம், பல் வலி, ரத்தம் வருதல், முதலியவைகளை நிறுத்தி பல்லுக்கு பலத்தை யுண்டாக்கும். டப்பி 1-க்கு அணு 3.

K. ஜகதீசன் கம்பெனி,
திருவல்லிக்கேணி,
சென்னை.

# பைந்தமிழ்

## (ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

அரிய தமிழில் வெகு நல்ல நடையுடனும் சுவையுடனும், எழுதப்பட்ட பல முக்கியமானதும் கல்வி யூட்டக்கூடியதுமான விஷயங்கள் நிறைந்துள்ளது. பல பிரபல வித்வான்களும் பண்டிதர்களும் எழுதும் விஷயங்களுள்ளது. தமிழ் நாட்டு ஆண் பெண்களுக்கு முற்றிலும் அறிவு ஊட்டுவது. தமிழபியானிகளின் வரவேற்புக்குமுற்றிலும் பாத்திரமானது.

உயர்ந்த காயிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டது. ஒவ்வொரு இல்லந்தோறும் அடையுமாறு சந்தாவும் வெகு குறைவாக ஏற்படுத்தியிருக்கிறோம்.

---

### சந்தா விகிதம்.

| | ரூ | அ. |
|---|---|---|
| ஜீவிய சந்தா. இந்தியா பர்மா சிலோன் தேசங்களுக்கு ... | 25 | 0 |
| அன்னிய தேசங்களுக்கு ... ... | 35 | 0 |
| வருஷசந்தா இந்தியா பர்மா சிலோன் ... ... | 2 | 8 |
| அன்னிய நாடுகளுக்கு ... ... ... | 3 | 12 |
| தனிச்சஞ்சிகை விலை ... ... ... | 0 | 4 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்தசந்தா கிடையாது. ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டுகள் சந்தாதாரர்கள் சேர்ப்பதற்குத்தேவை. மற்ற விபரம் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

வியாபார விளம்பரத்துக்கு வெகு உசித்தாயது.

---

### விளம்பர விகிதம்.

| | ரூ | அ. |
|---|---|---|
| ஒருபக்கத்துக்கு ஒருமாதம் ... ... ... | 7 | 0 |
| அரைப்பக்கத்துக்கு டை ... ... ... | 4 | 0 |

அரைப் பக்கத்துக்குக் குறைந்த விளம்பர பிரசுரம் எற்றுக்கொள்ளத் தகாது. எப்போதும் பாதித்தொகையை முன் பணமாய் அனுப்பவேண்டும். மற்ற பாதியை வி. பி. மூலமாய் வசூலிக்கப்படும்.

மாதிரி காப்பி இரண்டணா தபால் ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு அனுப்பப்படும்.

திருவல்லிக்கேணி
சென்னை.

மானேஜர்
"பைந்தமிழ்" ஆபீசு.

PUBLISHED BY K. JAGADISAN B.A., EDITOR, MADRAS.

Printed by Solden & Co., Madras. S.E.

சென்னை-600 008.
14 4021.
JL
O31m211,N23P4
N23.13